www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 10.03 திருவள்ளுவர் ஆண்டு 2053

14.11.2022 - 13.12.2022

ISSN : 2195-6480




## இலங்கையின் பொருளாதாரமும் மத அரசியலும்

## வரலாற்று நாயகன்

## தமிழ் ஈழம் சந்திக்கும் சவால்களும், தடைகளும்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

# Dortmund மாநகரில் மளிகை உலகின்

BIGG BOSS

TKS BEST FOODS



















V BOX

பெறுமதியுள்ள



119€*

கிடைக்கும்

7ஆம் ஆண்டு
நிறைவு விழா மற்றும்
தீபாவளி பண்டிகை முன்னிட்டு
சிறப்புத் தள்ளுபடி விற்பனை

## மலிவும் தரமும் என்றும் உங்கள் TKS



Rheinische Str.79-44137-Dortmund

tksbestfoods

0049 231 950 468 83

www.tksbestfoods.de

tks-bestfoods@web.de

ortel MOBILE




SMART WORLD +5 GB

## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to 20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***

ALLNET FLAT +5 GB

## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU

Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***

INTERNET FLAT +5 GB

## 11 GB Internet Flat

Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***



**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play App Store

Aufladbar mit: ortel O2 e-plus



AKARAM
# அகரம்


மாதாந்த இதழ் Monthly Magazine

14 ஐப்பசி 2022 - 13 கார்த்திகை 2022

சுவடி / ISSUE 10.03



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

**www.akaram.eu**



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் வணக்கம். உங்களின் பேராதரவும், பேரன்பும் இருப்பதானால் 'அகரம்' தமிழீழ தேசிய அரசியலை முன்னெடுத்து, பல இன்னல்கள், வசைகள், பணத் தடைகளை முறியடித்து, தொடர்ந்தும் மிகச் சிறிய பரப்பளவில் இயங்கி வர முடிகிறது.**

இது எங்கள் மாவீர செல்வங்களின் உயிர்க் கொடைகளை, ஈழத் தமிழ் மக்கள் கண்களில் நீரோடும், கைகளில் ஒளித் தீபங்களோடும் அழுது, புலம்பி ஆறுதல் காணும் மாதம். ஆனால், சாட்சியங்களால் பதிவு செய்யப்பட்ட சிங்களத் தலைவர்களில் முக்கியமானவரான ரணில் விக்கிரமசிங்க, இன்று அதே வழிகளில் தனி மனித ஏதேச்சாதிகாரியாகக் குறுக்கு வழிகளில் எந்த ஒரு தொகுதி வாக்காளரின் ஆதரவைப் பெற முடியாதவர் தமிழர்களையும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் பயங்கரவாதிகள் என விமர்சிக்கிறார்.

முன்னர் புலிகள் அமைப்பிலிருந்து கிழக்குத் தளபதி கருணாவைப் பிரித்ததும், தமிழர் போராட்டத்தை அழிக்கவும் தானே செய்த சாதனைகள் எனப் பேசிய சிங்கள, பவுத்த பயங்கரவாதியும் அவரே என்பதை த.தே.கூட்டமைப்பின் வாழ்நாள் தலைவராக, சிங்கள



அரசுகளுக்கு உலக அரசியல் அரங்குகளில் முட்டுக் கொடுத்த இரா.சம்பந்தன், நீலன் திருச்செல்வம், லக்ஷ்மண் கதிர்காமர்கள் இன்று நேரில் பேச முடிந்தால், மனச்சாட்சி உள்ளவராகவும் இருந்தால் சொல்வார்கள். ஆனால் அவர்கள் பெற்ற பணமும், பதவியும், படாடோப வாழ்க்கையும் அவர்களைப் பேச விடாமல் தடுத்து விடும்.

பதவி, பணம், சொகுசு வாழ்க்கையின் அருமைகளைத் தெரிந்த காரணத்தால், தமிழ் மக்கள் தந்தை எனத் தத்தெடுத்த மலேசியாவில் பிறந்தவரான சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை, செல்வநாயகம் மக்கள் சேவையை மறந்து, நடைப் பிணமாக யாழ் மருத்துவமனையில் உயிர் போகும் நிலையிலும், பாராளுமன்ற உறுப்பினராக வாக்களித்த மக்களின் பிரதிநிதியாக வாழ்ந்து காட்டினார்.

இன்று அதே அரசியலை சம்பந்தன் செய்து கொண்டிருக்கிறார். நாளை வரப்போகும் தமிழ் மக்களின் மீட்பர்கள் எல்லாம் இப்படித்தான் இருப்பார்கள். எனவே, தமிழினத்தை எதிரிகளிடம் காட்டிக் கொடுத்து அழிக்கும் விபீடணர்களும், எட்டப்பர்கள் கூட்டமும் குறைவின்றித் தொடரும்.

காலம் எமக்கு இன்னொரு பிரபாகரனையோ, கோ சி மின் அல்லது நெல்சன் மண்டேலாவைத் தரும் வரை எமது மாவீரர் நினைவுகளும், தியாகங்களையும் பதியம் வைத்துக் காப்பாற்ற வேண்டிய கடமை நம் எல்லாருக்கும் உள்ளது.

'அகரம்' சென்ற இதழ்களில் தெரிவித்த ஊகங்களை உறுதி செய்யும் வகையில், தமிழின அழிப்பை சாத்தியமாக்கிய முன்னாள் இராணுவத் தளபதி, அடுத்த ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவேன் என அறிவித்து விட்டார். அவருக்கு 2010இல் வாக்களிக்கச் சொன்ன தமிழ் தலைவர்களும், வாக்களித்த தமிழ் மக்களும் இப்பவே இராணுவ முகாம்களிலோ, பதுங்கு குழிகளைப் புதுப்பிப்பதே நல்லது.

கொள்ளை அடித்தவர்கள் எல்லாம் பத்திரப் படுத்தி விட்டு, அடுத்த கொள்ளைக்கு வசதியாக ஐ.நா. ரணில் அரசுக்குப் பண உதவி வழங்க உலக நாடுகளைக் கேட்டுள்ளது. 'பிச்சை எடுத்தாராம் பெருமாள், அதைக் கொள்ளை அடித்ததாம் அனுமார்' என்பார்கள். 'அறப் படிச்ச பல்லி, கூழ்பானையில் செத்ததாம்' என்பது போல ஈழத் தமிழர் நிலை உள்ளது.

கடல் அட்டைப் பிரச்சினை சர்வதேச மயமாகி விட்டது. அதனால் தமிழ் மீனவர் யாழ் ஆரியகுள விகாரையின் சிங்களத் தலைமைப் பிக்குவின் உதவி கேட்டுள்ளதாம். இவ்வளவையும் நமக்குத் தேடி, நம் தலையில் கட்டிய சேறுபொன். இராமநாதன் தொடக்கம், இன்று சுமந்திரன், சாணக்கியனின் பொற் காலம் வரை மாதுரோகளான அத்தனை பேரையும் அகரம் இந்த மாவீரர் மாதத்தில் மலர் தூவி வணங்குகிறது.

*மீண்டும் வரும் வரை விடை பெறும்...*

**ஆசிரியர்,** அகரம் குழுமம்



த. எதிர்மன்னசிங்கம்



# தமிழ் ஈழம் சந்திக்கும் சவால்களும், தடைகளும்

**சாண்** ஏற முழம் சறுக்கும் நிலை, ஒவ்வொரு நிமிடமும் நிலத்திலும், புலத்திலும் தொடருகிறது. போகிற போக்கில் ஈழத் தமிழின அழிப்புப் போர், 2009 மே முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகள், காவு எடுத்த உயிர், உடைமை அழிவுகளை விடப் பல மடங்கு மோசமான இழப்புகளைக் கடந்த 13 வருடங்களாக ஈழத் தமிழ் மண்ணும், மக்களும் எதிர் கொண்டு வருவதை எவரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

அப்படிக் கண்டு கொண்டவர்களாக அரசியல் பேசும் தமிழர் தரப்பு அரசியல் தலைவர்களும், மனித உரிமை அரச மற்றும் தன்னார்வ அமைப்புகளும் எந்தவிதப் பொறுப்பும் இல்லாமல் சாரமும், சரக்கும் இல்லாத 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தாருங்கள் என வெட்கம், மானம், சூடு, சொரணை இல்லாத கோரிக்கையை வைக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்த விடயத்தில் தமிழ் ஈழ விடுதலைப் போரை முதலில் சிங்களத்துக்கும், இந்திய உளவுத் துறைகளின் அடியாளாக மாறி, எல்லா சிங்கள அரசுகளிலும் அமைச்சுப் பதவி வாங்கி, பச்சோந்தி அரசியல் செய்யும் டக்லஸ் தேவானந்தா, இன்று முதன்மையான அரசியல் கருத்துகளை முன்வைத்து, ஈழத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக, ஈழத் தமிழ் இனத்தின் முடி சூடா மன்னனாக அரசியல் தீர்வு பற்றிய கோரிக்கைகளை முன்வைத்து வருகிறார்.

எமது ஈழ விடுதலைக்காக ஈழ மக்கள் ஜனநாயக கட்சி என்ற பெயரில் இந்திய, இலங்கை அரசுகளின் அடியாளாக இன்றும் ஆயுத பலத்தோடு, ஒரு சிறு தொகை மக்களின் நாட்டாமை, ஜனநாயகம் நடத்தும் இவர், தமிழ் இனத்தின் அழியாத சாபக் கேடாகச் செயற்படுவது, அவரது தனிச் சிறப்பும், தகமையும் எனலாம்.

ஈழம் என்கிற தேசத்தின் விடுதலைக்காக இயக்கமும், கட்சியும் நடத்தும் இவர் ஈழ தேச

மக்களின் அரசியலை மடைமாற்றி, தூரநோக்கு அரசியல் என்கிற பொறுப்பில்லாத அரசியலை பேசும் அயோக்கிய அரசியல் அவருக்குத் தமிழ் நாட்டு சூளைமேட்டில் இந்தியப் பொது மக்களைச் சுட்டுக் கொலை செய்து சட்டத்தையும், தண்டனையையும் ஏமாற்றும் அரசியல்வாதி.



*1990*களில் யாழ் கோட்டை சிங்கள இராணுவ முகாம், புலிகளால் முற்றுகை இட்டிருந்த வேளையில், அங்கே சிக்கி இருந்த சிங்கள இராணுவ வீரர்களை கடல் மார்க்கமாகத் தப்பிப் போக உதவியவர். இந்திய உளவுத்துறைக்காக மாலை தீவில் ஆயுதக் கிளர்ச்சி செய்து இந்தியா, இலங்கையின் செல்லப் பிள்ளையாக தமிழினத்தைக் காவு கொடுத்து வருகிறார். இலங்கை நெடுத்தீவைத் தமது தளமாக, தமிழ் மக்கள் விரோத குற்றங்களின் பிதா மகராக செல்வாக்குடன் அரசியல் நடத்துகிறார்.

வடபகுதி ஊடாக கஞ்சா, போதை மருந்து என்பவற்றால் வடபகுதி மக்களும், மாணவரும் நோய்களையும், மரணங்களையும், குற்றங்களையும் சந்தித்து அவதிப்பட, இவரது கீழ்த்தரமான அரசியலே காரணமாகும். இந்த அரசியலுக்கு வசதியாக இந்திய அரசும், அதன் வடபகுதி துணைத் தூதரகமும் மக்களின் தேர்தல் உட்பட அனைத்து விடயங்களிலும் தலையிடுவதும், இலங்கை இராணுவத்தின் அடாவடிகளுக்கு மறைமுக ஆதரவளிப்பதும், ஈழதமிழ் தேசியத்தை எல்லா வகையிலும் வேரோடு அழிப்பதும் நோக்கங்களாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இந்தி கற்பிக்கப் படுகிறது. மிரட்டலுக்கும், வசதிகளுக்கும் பணிந்த கூட்டம் ஒன்று அங்கே சிவசேனை என்றும், பா.ஜ.க என்றும் உருவாக்கப்பட்டு, 75 வருடங்களாக ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையாக விளங்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு, இன்று சுமந்திரன் என்னும் தமிழ் மக்கள் இன விரோதி, அக்கட்சியின் தலைவராகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக உலகில் ஈழத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக வலம் வருகிறார்.

இதே நேரத்தில் 'தமிழ் ஈழம்' என்கிற சொல்லை, இந்திய மத்திய, மாநில அரசுகளும், எல்லா ஊடகங்களும், அரசியல் கட்சிகளும் திட்டம் இட்டே பேசுவதைத் தவிர்த்து வருவதாக தமிழகத்தின் மே 17 இயக்கத்தின் தலைவரும், நிறுவனருமான திருமுருகன் காந்தி அண்மையில் காணொளிப் பதிவில் பலமான ஆதாரங்களுடன் பேசி இருப்பதை யாரும் புறந்தள்ளி விட முடியாது. அவர் சென்னை பத்திரிகையாளர் சந்திப்பை இந்த இணைப்பில் பார்க்க முடியும்.

***https://www.youtube.com/watch?v=HYPERLINK"https://www.youtube.com/watch?v=3OjLNMsAV3c" 3HYPERLINK***

***https://www.youtube.com/watch?v=3OjLNMsAV3c"OjLNMsAVHYPERLINK***

***"https://www.youtube.com/watch?v=3OjLNMsAV3c"3 HYPERLINK "https://www.youtube.com/watch?v=3OjLNMsAV3c"c***






தமிழ் நாட்டில் எமது நிலை இதுவாக இருக்கும் பொழுது, இந்திய மத்திய அரசு 13ஆவது திருத்தத்தையே காப்பாற்றாமல், தமிழ் இனப் படுகொலையை முன்னின்று நடத்திய இந்திய அரசிடம், தனித் தமிழ் ஈழத்தைப் பற்றிப் பேச முடியும் என வாதிடுபவர்களின் செயல், காட்டிக் கொடுப்பாக இல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?.

இந்தக் கூத்தில் ஈழத்தில் காயப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகளின் நிலை கருதி, இந்தியாவிடம் கோரிக்கை வைப்பதை மன்னித்தாலும், 25 வருடங்களாக பிரான்சில் மனித உரிமை அமைப்பின் தலைவர் திரு.கிருபாகரன் போன்றோர் ஐ.நா.மற்றும் மனித உரிமை ஆணையத்தில் ஈழத் தமிழ் மக்களின் இன்னல்களை எடுத்துப் பேசிவரும் திறமை மிக்க புலிகளின் சார்பாக பேச வல்லவர், இப்பொழுது எல்லாம் இந்தியாதான். எதுவும் இந்தியாவால் முடியும் என்கிற பார்வையோடு 13ஆவது திருத்தமே சாத்தியம் என்றும், மேதகு தலைவர் பிரபாகரனின் விருப்பமும் அதுவே என்பது போலப் பிரச்சாரம் செய்து வருகிறார்.

தமிழினத்துக்கு த.தே.கூட்டமைப்பின் தலைவராக புலிகள் அமைப்பால் பாராளுமன்ற அரசியல் வழியில் போராடி, மீட்ட தமிழர் நிலங்கள், வளங்களை எல்லாம் தன்னாட்சி அரசை உருவாக்கிக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்ற சம்பந்தன் தலைமையிலான தமிழர் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைவர் இரா.சம்பந்தன் இறுதிக் கட்டப் போரின் பொழுது இந்தியாவுக்கு ஓடிச் சென்ற மாபெரும் இனத் துரோகத்தைச் செய்துள்ளார்.

20 வருடங்களுக்கு மேலாக சட்ட விரோதமான தடுப்பு முகாம்களில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையும், சித்திரவதையும் அனுபவித்த அப்பாவித் தமிழ் மக்களுக்குத் திடீர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீபாவளி பரிசாக 8 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து, பல தடவைகள் பொய் வாக்குறுதிகளை நத்தார், புதுவருடம், பொங்கல் பரிசாக ஆசைகாட்டி மோசம் செய்த இரா.சம்பந்தனைப் போல ஏமாற்றாமல் ரணில் 8 பேரை விடுதலை செய்தார்.

மீதமாக உள்ளவர்களின் விடுதலையை அட்டோனி ஜெனரல் செய்யும் சிபாரிசைப் பொறுத்து முடிவு எடுக்கப்படும் என ரணில் கூறி உள்ளாராம். அது விடயமாகக் கருத்து தெரிவித்த முன்னாள் நீதி அரசர் விக்கினேஸ்வரன் ஐயா “வெளிநாடுகளில் பரிமாறப்படும் இலஞ்சப் பணம் அரசியல் கைதிகளின் விடுதலையை வாங்கிக் கொடுக்கிறது” என்கிற குண்டை வெடிக்க வைத்துள்ளார். அதன் சூத்திரதாரி யார்? என்பதை கொழும்பு ரெலிகிராஃபில் வெளியான கட்டுரை ஏன் வெளிப்படுத்த வில்லை என வாசகர்கள் கேட்ட வண்ணமே உள்ளார்கள்.

உலகம் அறிந்த விடயத்தை அவர் ‘அப்பன் குதிருக்குள் இல்லை’ என்று சொல்ல முடியுமா?

இப்பொழுது இந்த நாடு தமிழருடையது அல்ல. தமிழர் உரிமை பற்றிப் பேசுவது பயங்கரவாதம் என மிரட்டுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாமல் தமிழரை அடக்க முடியாது. எனவே அதை சிங்களமும் நீக்காது, இந்தியாவும் நீக்காது. அதனால் அரசமைப்புச் சட்டம் மாறாது. தமிழருக்கு நாடும், வீடும் கிடையாது.

எத்தர்களும், ஏமாற்றுக்காரர்களும் தமிழினத்தைத் தலைமை தாங்கி அரசியல் செய்யும் எட்டப்பர்களின் பேச்சுதான் தொடரும். நாம் இந்தியா, இலங்கை என்கிற குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டாமல், உலக அரசுகளின் அரங்குகளில் நீதியைத் தேடிப்பெற எம் இனத்தை வலுப்படுத்த வேண்டும். எட்டாம் வகுப்பும் தாண்டாத படிப்பாளிகளை அரசியல் தலைவர்களாக்கி, அழிந்த வரலாறு மாற்றப்பட வேண்டும்.


Jaffna Stores
Geschäftsführer : Herr Thayaharan Nadarajah
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்
25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...
ENESAR
N.S.R.
தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்
மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்
ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்
Jaffna Stores
www.jaffnastores.com
info@jaffnastores.de
Tel. - 0521 174794
Mobile - 01732807906
Feilenstraße 8
33602 Bielefeld
Subash
Subash
Basmati Rice



# வரலாற்று நாயகர்கள்

உலகில் மனிதர்கள் இதுவரை சாதித்ததை ‘உலக வரலாறு’ என்று எடுத்துக் கொண்டால், அந்த உலக வரலாறு என்பது, சில வரலாற்று நாயகர்களின் விளையாட்டே!. இவ்வுலகில் நாம் காணும் அனைத்தும், அம்மனிதர்களின் சிந்தனையின் விளைவாக உருவானதே!. அவர்களின் சிந்தனைதான் இன்றும் மனிதர்களை உள்ளிருந்து இயக்கி, உலகை இயங்க வைத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள்தான் பெரும் வரலாற்றுத் திருப்பு முனையில் மக்களின் காவலனாக இருந்திருக்கிறார்கள். அவர்கள்தான் தூங்கிக் கொண்டிருக்கும் மக்களின் ஆன்மாவை எழுப்பி, கொழுந்து விட்டு எரிய வைக்கும் நெருப்பாக இருந்திருக்கிறார்கள். உலக வரலாறு என்பதே அவர்களின் வரலாறுதான். மக்கள் அவர்களை வணங்கி வாழ்கிறார்கள், அவர்களைப் போன்று எவரையும் மக்கள் அவ்வாறு வணங்குவதில்லை.

“ஒரு வரலாற்றைப் படைக்கும் தலைவரை எப்படி உருவாக்குவது? என்பது யாரும் அறியாதது. அவர்கள் இயற்கையாகத் தோன்றுகிறார்கள். அவர்கள் எங்கே தோன்றுவார்கள்? எப்படித் தோன்றுவார்கள்? என்பதையும் தீர்மானிக்க முடியாது. அவர்கள் இயற்கையில் எப்படி உயிர்கள் தோற்றம் பெருகின்றனவோ, அதுபோல தோன்றுகிறார்கள்” என்கிறார் வில்லியம் சேம்சு. பரிணாமத் தத்துவம் எந்த உயிர்கள் வாழும், செழிக்கும் எனத் தீர்மானிக்கிறது, ஆனால் எந்த உயிர்கள் தோற்றம் பெறுகின்றன? என்பதைத் தீர்மானிப்பதில்லை. புது உயிரிகளின் உருவாக்கம் என்பது, இயற்கையில் குருட்டுத் தனமாக உருவாகும் மரபணு மாற்றங்களால் ஏற்படுகிறது. அதைப் பரிணாமம் தீர்மானிப்பதில்லை. அவ்வாறு புது உயிர்கள் தோன்றிய பின்னரே பரிணாமம், அவ்வுயிர்கள் வாழுமா? அழியுமா? எனத் தீர்மானிக்கிறது.

அதுபோலவே வரலாற்று நாயகர்களின் தோற்றமும் இயற்கையில் உருவாவது. அவர்கள் ‘இயற்கையின் கொடை’ என்கிறார் சேம்சு. அவர்களை சமூகம் உருவாக்குவதில்லை, அவர்கள் இயற்கையால் உருவாக்கப்படுகிறார்கள். அவர்கள் தோன்றிய பின்னர், ஒரு சமூகம் அவர்களை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். அவர்களை ஏற்றுக்கொண்ட சமூகம் முற்றிலுமாக உருமாறி, ஒரு புது சமூகமாகப் பிறப்பெடுக்கிறது. அது ஒரு



உயிர், இன்னொரு உயிராக இயற்கையில் மாறுவதைப் போன்றது. ஒரு சூழலில் புதிதாக ஒரு உயிரை உள் நுழைத்தால், அது அந்தச் சூழலில் உள்ள மற்ற உயிர்களுக்கிடையே சமநிலையை மாற்றி, புது சமநிலையை உருவாக்கும். அதுபோலவே வரலாற்று நாயகர்களும், அந்தச் சமூகத்தை மாற்றுவதுடன் மட்டும் இல்லமால், சுற்றியுள்ள நாடுகள், சமூகங்களுக்கிடையேயான சமநிலையையும் மாற்றுகிறார்கள்.

ஒரு சமூகம் வரலாற்று விதிகளின்படி தானாக முன்னேறும் என்பதெல்லாம் தவறான பார்வை. அப்படிப்பட்ட எந்த விதிகளும் இல்லை. தண்ணீர் தானாகக் கொதிப்பதில்லை, அதைச் சூடேற்றினால்தான் அது கொதிக்கும். அதுபோல ஒரு சமூகத்தை மாற்றுவதற்கு வரலாற்று நாயகர்கள் தேவை. அவ்வாறான நாயகர்கள் தோன்றவில்லை என்றால், அச்சமூகம் முன்னேறாமல் தேங்கி விடுகிறது, அழிந்தும் போகிறது. உதாரணமாக அரேபியர்களுக்கு முகம்மது நபிகள் தோன்றாவிட்டால், வரலாற்றில் இவ்வளவு ஏற்றம் பெற்றிருப்பார்களா? என்பது பெரும் ஐயம்.

சார்டினா, சிசிலி ஆகியவை அருகருகே இருக்கும் தீவுகள். சாடினாவுக்குச் சிசிலியை விட அனைத்து இயற்கை வளங்களும் அதிகம். அப்படி இருந்தும் வரலாற்றில் சிசிலி மக்களே மிகச்சிறப்பாக வாழ்ந்திருக்கிறார்கள். சார்டினா வரலாற்றில் பலமுறை அடிமைப்பட்டு, பின்தங்கி இருக்கிறார்கள். இதற்கான காரணமாக வில்லியம் சேம்சு கூறுவது, "சாடினா மக்களுக்கு நாட்டுப் பற்றை, சுதந்திர வேட்கையை ஊற்றி, வாழ்க்கையில் குறிக்கோளுடன் செயல்பட வைக்க எந்த ஒரு வரலாற்று நாயகனும் தோன்றவில்லை".

இனி தலைவர் பிரபாகரனுக்கு வருவோம். வில்லியம் சேம்சு கூறும் அனைத்து பண்புகளும் பிரபாகரனுக்கு உண்டு. அவர் தனித்துவமானவர், இயற்கையின் பரிசு. அவரைப் போன்று ஒருவரை தமிழர் வரலாற்றிலேயே பார்க்க முடியாது. அவரை ஏற்றுக்கொண்ட சமூகத்தை முற்றிலும் மாற்றிக் காட்டினார். நண்டுகளாக ஒற்றுமையற்ற மக்களை, உலகம் வியக்கும் புலிகளாக மாற்றிக் காட்டினார். ஒரு புது தமிழ் சமூகத்தை உருவாக்கிக் காட்டினார். அடிமைத் தனத்திற்குப் பழகி போனவர்களுக்குச் சுதந்திரம் என்றால் என்ன? என்று காண்பித்தார். ஒரு தனி




நாட்டை அவர்களைக் கொண்டே உருவாக்கிக் காண்பித்தார். சுற்றுயுள்ள நாடுகளுக்கிடையே ஒரு புதிய ஆற்றல், சமநிலையை உருவாக்கினார். அவர் இல்லாமல் இது எதுவுமே நடந்திருக்காது.

சிலர் கூறலாம் 'அவர் சாதித்ததை எல்லாம் இழந்து விட்டோம்' என்று. இங்குதான் பலர் பிழை இழைக்கின்றனர். இதை உயிரியல் துணை கொண்டு விளக்கலாம். மனிதன் பரிணாமத்தில் அதியுச்ச ஆற்றல் கொண்ட உயிர். ஆனால், இதே மனிதன் ஒரு காலத்தில் சூழ்நிலை மாற்றத்தால், மொத்தம் 40 குடும்பங்கள் என்ற அளவு எண்ணிக்கை சுருங்கி விட்டது. முற்றிலுமாக அழிந்துவிட வாய்ப்பிருந்தது. ஆனால் அதிலிருந்து மனிதன் மீண்டு, உலகையே ஆள்கிறான். இயற்கையில் வளர்ச்சி என்பது பல விபத்துகளுடன் சீராக இருப்பதில்லை. ஒரு உயிர் சிறந்ததா? இல்லையா? என்பதை விபத்துகளை வைத்துத் தீர்மானிக்க முடியாது. அதற்குள் பொதிந்து இருக்கும் ஆற்றலின் துணை கொண்டே அறிய முடியும்.

அதுபோலவே புலிகளின் இழப்பையும் பார்க்க வேண்டும். நடந்தது நமது கைகளையும் தாண்டி, மாறிய சூழலின் விளைவு. நாம் பார்க்க வேண்டியது பிரபாகரன் உருவாக்கிய புதிய தமிழ்ச் சமூகத்திற்கு சாதிக்கும் ஆற்றல் உண்டா? இல்லையா? என்பதே. பிரபாகரனின் சாதனை என்பது அடிப்படை சமூகப் பரிணாமம். ஒரு புதிய சமூக உருவாக்கம். அதைப் புலிப் பண்பாடு என்கிறோம். அதற்கு இருக்கும் சாதிக்கும் மனபலம், சுதந்திர வேட்கை உலகில் உள்ள மற்ற அனைத்து சமூகங்களையும் விட மிக அதிகம். அது நிரூபிக்கப்பட்ட ஒன்று. பிரபாகரனை விட்டால், தமிழ்ச் சமூகத்திற்கு வேறு எந்த பாதையும் கிடையாது. அப்படி ஒன்று இருக்கிறது என்றால், அதற்கு பிரபாகரனை விட சிறந்த வரலாற்று நாயகன் தேவை. அப்படி ஒருவர் கிடைக்க இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் வாய்ப்பில்லை. தண்ணீரில் தத்தளிக்கும் தமிழனுக்கு, கிடைத்த காப்பாற்றும் கயிறுதான் பிரபாகரன். இதை உறுதியாக பிடிப்பவர்கள் கரையேறி சாதனைகள் படைக்கலாம். இல்லையென்றால் சிறிது சிறிதாக அழியலாம். முடிவு மக்கள் கையிலேயே இருக்கிறது.

**பின் குறிப்பு:** இத்தத்துவத்தின் பொருள் மற்ற காரணிகளுக்கு முன்னேற்றத்தில் எந்த பங்கும் இல்லை என்பது அல்ல. ஆனால் அடிப்படையில் முன்னேற்றத்தில் அதியுச்ச முதன்மை பங்கை வரலாற்று நாயகர்கள் வகிக்கிறார்கள்.

**தரவுகள்**

**Carlyle, Thomas. On heroes, hero-worship, and the heroic in history. Vol. 1. Univ of California Press, 1993.**

**James, W., 2020. Great men, great thoughts, and the environment. In Shaping Entrepreneurship Research (pp. 131-149). Routledge.**



# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள நாடுங்கள்

StaR-Impex



Rabeena
Since 1986
We've Mastered Taste

Aachi
The Mother of Good Taste

BTM

Double Horse
Bringing Health to Life

பொருட்களை ஜேர்மனியில் மொத்தமாக விநியோகம் செய்யும் ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS



MDH · Laziza · Cock Brand · Daawat The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru · Aroy-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila

சண் தவராஜா

## யார் ஈழத் தமிழர்?

இந்தக் கேள்வி நம்மில் பலருக்கு அபத்தமாகத் தோன்றலாம். ஒரு சிலருக்கு எரிச்சல் கூட வரலாம். பலருக்கு என்மீது ஆத்திரம் கூட வரலாம்? ஆனால், இந்தக் கேள்வியைக் கேட்டே ஆக வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது. மக்களின் பெயரால் அரசியல் செய்வதாகப் பிரகடனம் செய்தவாறே, மனம் போன போக்கில் நடந்து கொள்ளும் அரசியல்வாதிகளும், புலம்பெயர் நாடுகளின் அரசியல் செயற்பாட்டாளர்களும் நடந்து கொள்வதைப் பார்க்கும்போது இந்தக் கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. ஈழத் தமிழர் யார்? என்பதைப் புரிந்து கொள்வதன் ஊடாகவே அத்தகையோரின் செயற்பாடுகளின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளலாம் என்ற அடிப்படையிலேயே இந்தக் கேள்வி அவசியமாகிறது.

இந்தக் கேள்விக்கு மேம்போக்காக விடை சொல்வதானால், “ஈழத்தில் பிறந்த அனைத்துத் தமிழர்களுமே ஈழத் தமிழர்” எனச் சொல்லி விடலாம். ஆனால், நடைமுறையில் அந்த அர்த்தத்திலேயே அது அணுகப்படுகின்றதா? என்பதே எனது கேள்வி. தமிழர் என்ற பதத்தினுள் யார் யாரெல்லாம் அடக்கப்படுகின்றார்கள்?

ஈழப் போராட்டத்தில் பல்வேறு இயக்கங்கள் பங்கெடுத்துக் கொண்டிருந்தாலும், பிரதானமாக ஐந்து இயக்கங்களே முன்னிலை வகித்தன. தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பு என்ற இந்த ஐந்து இயக்கங்களிலும், முன்னைய நான்கு இயக்கங்களும் தமிழர் தாயகப் பிரதேசம் என வரையறுக்கப்படும் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களே, ஈழத் தமிழர்கள் என வரையறுத்திருந்தன. ஆரம்ப காலகட்டத்தில் இந்த வரையறைக்குள் ‘இஸ்லாமியத் தமிழர்களும்’ அடங்கியிருந்தனர். ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பைப் பொறுத்தவரை அது ‘ஈழத் தமிழர்’ என்ற பதத்துக்குப் பதிலாக ‘ஈழவர்’ என்ற பதத்தைப் பயன்படுத்தியது. “மதத்தால் இந்துவானாலும், மாண்பின் முஸ்லிம் என்றாலும், வேதம் பயிலும் கிறஸ்துவரும், தீர சைவனானாலும் ஈழத் தமிழர் ஈழவரே, அவர் எங்கிருந்தாலும் நம்மவரே” என்பது ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பின் கோசம். இந்த ஈழவருள் மலையகத் தமிழர்களும் அடக்கம்.



ஈழத் தமிழர் அரசியலில் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற ஒரு பதம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்திருந்ததை நாம் அறிவோம். தமிழ் மக்களோடு(?) இஸ்லாமியத் தமிழர்களையும் இணைத்ததாக இந்தப் பதம் பாவிக்கப்பட்டு வந்திருந்தது. இப்போதும் இடையிடையே இந்தப் பதம் ஒரு சிலரால் பாவிக்கப்பட்டு வருகின்றமையை நாம் அறிவோம்.

இஸ்லாமியத் தமிழர்கள் எனத் தமிழ் அரசியல்வாதிகளால் அடையாளப் படுத்தப்பட்ட மக்கள் குழாம் 1980களின் நடுப் பகுதியில் இருந்து தம்மை முஸ்லிம்கள் என அழைக்கத் தொடங்கியது. அது மாத்திரமன்றி, தம்மை ஒரு தனியான தேசிய இனமாகவும் கருதிச் செயற்படத் தொடங்கியது. தற்போதும் அந்த நிலையே நீடிக்கின்றது.

முஸ்லிம்கள் மற்றும் இஸ்லாமியத் தமிழர்கள் என்ற பதங்கள் ஒரு அடையாளச் சிக்கலின் வெளிப்பாடே!. இந்த அடையாளச் சிக்கல் முஸ்லிம்கள் மத்தியில் 1980களின் நடுப்பகுதி வரை நீடித்தது. அதற்கு முந்திய காலகட்டத்தில் இன்றைய முஸ்லிம்கள் தம்மைத் தமிழ் பேசும் மக்கள் என்ற வரையறைக்குள் அடக்கிக் கொண்டு செயற்பட்டனர் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதற்கு எதிராக, அரசியல் செயற்பாட்டை ஆரம்பித்த முதலாவது அரசியல் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியில் 80கள் வரை முஸ்லிம்களும், பல்வேறு வழிகளிலும் பங்கெடுத்து இருந்தார்கள் என்பது வரலாறு. அதேபோன்று, இன அடிப்படையிலான பாரபட்சத்துக்கு எதிராக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்ட வேளையில், அவர்களோடு முஸ்லிம் இளைஞர்களும் கரம் கோர்த்துக் களம் இறங்கினார்கள் என்பதும் வரலாறே!. தமிழீழ விடுதலைக் கழகம் மற்றும் ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பு ஆகியவற்றின் மத்தியக் குழுவில் கூட முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்ததாக ஞாபகம்.

ஆனால், இடைநடுவில் 'ஈழத் தமிழர்கள்' என்ற வரையறைக்குள்




முஸ்லிம்கள் இல்லாமல் போனார்கள். 1990இல் யாழ் குடாநாட்டில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, கிழக்கின் பல இடங்களிலும் முஸ்லிம்கள் மீது விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் போன்றவை இந்தப் பிளவை உறுதி செய்தது. 1990ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரையில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட மாநாடு ஒன்றில், இஸ்லாமியத் தமிழர்கள் என்ற பதம் சர்ச்சைக்கு உள்ளாகியமைப் பற்றிய செய்திகள் வெளியாகி இருந்தமையைப் பலரும் அறிவர்.

இலங்கைத் தீவில் வாழும் முஸ்லிம்கள் தனியான தேசிய இனம் எனப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இன்றைய நிலையிலும் அவர்களை இஸ்லாமியத் தமிழர்கள் என அடையாளப்படுத்தத் தமிழர் மத்தியில் இன்னமும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையும் இடைக்கிடைக் காண முடிகின்றது.

மலையகத் தமிழர்கள் விடயத்திலும் இதுபோன்ற ஒரு அடையாளச் சிக்கல் உள்ளது. மலையகப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களை ஈழத் தமிழர்களாக ஏற்றுக்கொள்ள விரும்பாத அரசியல் செயற்பாட்டாளர்கள் தமிழர் தாயகப் பிரதேசத்தில் வாழும் மலையகத் தமிழ் மக்களை மலையகத் தமிழர்கள் என அங்கீகரிப்பதற்குத் தயக்கம் காட்டுவதையும் காணலாம்.

இவை தவிர, சாதி அடிப்படையிலான, பிரதேச அடிப்படையிலான குறிப்பாக மத அடிப்படையிலான பிளவுகள் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுவதை மறுதலிக்க முடியாது. இத்தகைய பிளவுகள் அவ்வப்போது எட்டிப் பார்ப்பதை நடப்புக் காலத்திலும் காண முடிகின்றது. குறிப்பாகத் தமிழர்களை சைவர்களாக (இந்துக்களாக) மாத்திரம் பார்க்கும் ஒரு போக்கு உள்ளது. இவர்களைப் பொறுத்தவரை கிறிஸ்தவர்கள் யாவரும் உத்தியோகத்துக்காக மதம் மாறியவர்கள். கிறிஸ்தவத்தில் அண்மைக் காலத்தில் முளைத்துள்ள ‘அல்லேலுயாக் குழுவினர்’ எனக் கொச்சையாக விளிக்கப்படும் மக்கள் கூட்டத்தை சகித்துக் கொள்ள முடியாத உணர்வு கொண்டவர்கள் இவர்கள். உதட்டளவில் மத நல்லிணக்கம் பற்றியும், தமிழர்களின் ஒற்றுமை பற்றியும் பேசும் இவர்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சைவ அடையாளங்களை வெளிப்படுத்திக் கொள்ளவும், தமது சாதியப் பெருமை(?)யைப் பறைசாற்றிக் கொள்ளவும் தவறுவதில்லை. இவர்களின் இத்தகைய போக்கு எவ்வாறான தவறான புரிதலை ஏற்படுத்தி உள்ளது என்பதை இவர்கள் அறிந்து கொள்வதில்லை.

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் தினமணி பத்திரிகையின் அண்மைய ஆசிரியர் தலையங்கம் ஒன்று, இத்தகைய போக்கின் தன்மையை நன்கு விளக்கப் போதுமானது. ‘நீதியின் நேசக்கரம்’ என்ற தலைப்பில் அக்டோபர் 31ஆம் திகதி எழுதப்பட்ட இந்த ஆசிரியர் தலையங்கம் பின்வருமாறு கூறுகிறது.

“...இலங்கையில் காணப்படும் பிரச்சனையை தமிழர்களுக்கும்,




Original Srilankisches & Indisches Restaurant


# Sweet Chilli




100% Halal
100% Frisch
100% Naturgewürze
100% Naturkräuter



புதிய முகவரியில்
150 ஆசனங்களுக்கும் மேல்




**Rheinische Str. 78**
**44137 Dortmund**
**Tel : 0231 315 46 84**
www.sweetchilli-do.de

சிங்களவர்களுக்கும் இடையேயான பிரச்சனையாக வடிவமைத்தது, இலங்கையின் வடகிழக்கு மாகாண தமிழர்களின் நலன்களைப் பாதித்தது. உண்மையில் பார்க்கப்போனால், அடிப்படைப் பிரச்சனை மொழி ரீதியானதல்ல, அது மத ரீதியிலானது.

பெரும்பான்மை சிங்கள-பௌத்தர்களுக்கும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட வடகிழக்கு மாகாண ஹிந்துகளுக்கும், கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் பேசும் இஸ்லாமியர்களுக்கும் இடையேயான பிரச்சனை அது. பெரும்பான்மையினரான பௌத்த-சிங்களர்கள், சிறுபான்மையினரான ஹிந்துகளுக்கும், முஸ்லிம்களுக்கும் சம உரிமை வழங்க மறுத்ததாலும், மத ரீதியிலான இனவெறித் தாக்குதலை முன்னெடுத்ததாலும் உருவானதுதான் இலங்கையின் பிரச்சனை என்பது கூர்ந்து சிந்தித்தால் விளங்கும்.

இன்னும் சொல்லப்போனல், பலாலியில் ஹிந்து புரோகிதர் ஒருவர் சிங்கள-பௌத்தர்களால் தீக்கிரை ஆக்கப்பட்டதைத் தொடர்ந்துதான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதம் ஏந்த முற்பட்டார் என்பதுதான் வரலாற்று உண்மை...” என நீள்கிறது அந்த ஆசிரியர் தலையங்கம். தினமணி பத்திரிகைக்கு ஈழ விவகாரம் சுத்தமாகத் தெரியாது என்பதற்கு, இந்தப் பத்தி எடுத்துக்காட்டு. ஆனால், இத்தகைய சிந்தனை தமிழ் மக்கள் மத்தியிலும் உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனையை மையமாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட முதலாவது அரசியல் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவனரான தந்தை செல்வா என அழைக்கப்படும் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக விளங்கிய அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இந்து அல்ல, கிறஸ்தவர்கள் என்பது தினமணிக்குத் தெரியாமல் போகலாம். ஆனால், ஈழத் தமிழ் மக்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

ஈழப் பிரச்சனையை மதப் பிரச்சனையாக நோக்கி அணுகுவோர் பிரச்சனையைச் சரியாகப் புரிந்து கொள்ளாதது மட்டுமன்றி, சரியான தீர்வை நோக்கிச் செல்லவும் முடியாது.

ஈழத் தமிழர்கள் என்ற வரையறையில் இருந்து முதலில் முஸ்லிம்கள் காணாமற் போனார்கள். போகிற போக்கில் கிறிஸ்தவர்களையும் கழித்துக் கொண்டால் எஞ்சப் போவது யார்?

எனவே, அரசியலில் ஈடுபடுவோர் முதலில் ஈழத் தமிழர்கள் யார்? என்பதைத் தெளிவாக வரையறை செய்து கொள்ள வேண்டும்.





CHOLAN

சோழன் பொருட்களின்
விநியோகஸ்தகர்

DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழ வகைகள்
மற்றும் உணவுப்பொருட்களை
மொத்தமாக பெற்றுக் கொள்ள
நாடுங்கள்

StaR-Impex





**Lebensmittel Grosshandel e.K.**

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net






தேவன்

# ஈழத் தமிழர்கள் மீதான நிலைப்பாட்டில் யேர்மணிய அரசின் திடீர் மாற்றம் ஏன்?

பிரித்தானியர்களால் கட்டமைக்கப்பட்ட, சிறீலங்கா அரசின் குரூரமான இன அடக்குமுறைகளுக்கு எதிராகப் பல ஆண்டுகளாகப் போராடி வந்த தமிழ் மக்களுக்குப் பாரம்பரியமாக, சொந்தமாக இருந்த நிலங்களில் அண்ணளவாக 75 வீதமானவை, அமைதிப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் விடுதலைப் புலிகளாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தன. இருந்த போதிலும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அந்தத் தீவில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் தமது இறைமையைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய சூழலை உருவாக்கக் கூடிய ஓர் தீர்வை அமெரிக்கா அறவே விரும்பவில்லை.

குறிப்பிட்ட இந்தப் பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தால், இந்தத் தீவை இராணுவத் தளமாக அமெரிக்கா எவ்வகையிலும் பயன்படுத்த முடியாத ஒரு சூழல் ஏற்படும். அமெரிக்காவுக்கு, சிறீலங்கா எவ்வகையில் மூலோபாய அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தொடர்பான ஊடகவியலாளர் சிவராமின் வழங்கிய செவ்வியை இங்கே நினைவிற் கொள்ள வேண்டியுள்ளது.

அமைதிப் பேச்சுவார்த்தையைத் திட்டமிட்ட வகையில் தோல்வியுறச் செய்த அமெரிக்கா, 2006ஆம் ஆண்டு, மே மாதத்தில் தனது அழுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கும் முயற்சியில் வெற்றி கண்டதுடன், அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வந்த ஆதரவையும் மீளப்பெறச் செய்தது.

முன்னர் எதிர்வுக் கூறப்பட்டது போன்று, விடுதலைப் புலிகள் மீது, ஐரோப்பிய ஒன்றியம் விதித்தத் தடையைத் தொடர்ந்து, அமைதி முயற்சியை முற்று முழுதாகக் கைவிட்ட சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தை அழித்தொழிக்கவும், அந்தத் தீவில் வாழ்கின்ற ஏனைய சமூகங்களுடன் இணைந்து தமிழ் மக்கள் மாண்புடன்

வாழ்கின்ற வாய்ப்பை அழித்தொழிக்கவும், பன்னாட்டு அரசுகளின் உதவியுடன் கொடூரமான ஓர் போரை முன்னெடுத்தது. அமைதிப் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு எதிராக இராசதந்திர அளவிலும், அரசியல் நிலைப்பாட்டிலும் அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளே பின்னர் தொடர்ந்து வந்த இனவழிப்பைத் தூண்டிய பெருங்குற்றமாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பாக்கி, அதற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு யேர்மனிய நீதி அமைச்சுக்கு 2010 இல் யேர்மனிய அரசு வழங்கிய அதிகாரமானது, யேர்மனி கடைப்பிடித்து வந்த கொள்கையில் மேலும் ஒரு தோல்வியாகும்.

2006ம் ஆண்டில் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக ஓர் புதிய போரை சிறீலங்கா அரசு தொடுத்த பொழுது, தமிழ் மக்களுக்கு எதிரான கொடுமையான செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப் பட்டன. அதே வேளையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அமெரிக்காவின் நிலைப்பாடும், இன்னும் ஆழமான நிலைக்குச் சென்றது. விடுதலைப் புலிகளின் நிர்வாகத்துக்குப் பணமோ அல்லது ஆயுதங்களோ சென்று சேர்வதைத் தடுப்பதற்கென அமெரிக்கா பல 'தொடர்புக் குழுக்களை' உருவாக்கியது ***Wikkileaks*** இவற்றை ஆதாரமாக வெளியிட்டது.

இந்நிகழ்வுகளின் தொடர்ச்சியாக அவுசுத்திரேலியா, கனடா, அமெரிக்கா, பிரான்சு, இத்தாலி, ஐக்கிய இராச்சியம் போன்ற ஈழத்தமிழ் அகதிகள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்ற மேற்கு நாடுகள் பலவற்றில், விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களுக்கு எதிராக கைதுகளும், திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப் பட்டன.

எது எவ்வாறிருப்பினும், ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு, யேர்மனி தனது ஆதரவை வழங்கிய போதிலும், ஈழத்தமிழ் ஆதரவாளர்களை யேர்மனி அப்போது கைது செய்யவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை இயல்பாகவே அமுல் நடத்த வேண்டிய தேவை யேர்மனிக்கு இருக்கவில்லை. அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக யேர்மனி நோக்குகின்றது என்பது தொடர்பான எந்தவித சமிக்ஞையும் அவ்வேளையில் தென்படவில்லை.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்குச் சரியாக ஒரு வருடத்துக்கு முன்னரே, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைத் தனது நாட்டுக்கு யேர்மனி அழைத்திருந்தது. போர் மீண்டும் தொடங்கப்பட்ட பின்னர், சிறீலங்கா அரசுக்கு நிதியுதவி அளிப்பதில்லை என்ற நிலைப்பாட்டுக்கு யேர்மனி தனது ஆதரவை வழங்கியிருந்தது. ஆனால், அமெரிக்க ஆரம்பத்திலிருந்தே சிறிலங்காவிற்கு உதவி வழங்கி வந்தது. 2009இல் விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப்பட்ட பிரதேசங்களில் படுகொலைகள் அதிகமாக இடம்பெற்ற போதும், மேற்கொள்ளப் பட்டுக் கொண்டிருந்த இனவழிப்புக்கு எதிராக தமிழ் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்த போதும், பிரான்சில் நூற்றுக் கணக்கான ஈழத் தமிழ் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்ட பொழுதும், யேர்மனிய அரசு அவற்றை எந்தவிதத்திலும் தடைசெய்யவில்லை.

அதன்பின்னர் யேர்மனிய அரசின் கொள்கையில் 2010 ஆம் ஆண்டில் ஒரு முக்கியமான மாற்றம் ஏற்பட்டது. முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுச் சில மாதங்களே ஆகியிருந்த நிலையில், சுதந்திரத்துக்கான தமிழ் மக்களின் நம்பிக்கை அனைத்தும் தவிடு பொடியாக்கப்பட்டு, தமது உறவுகள் கொடுமையாகக் கொல்லப்பட்டதனால் உளவியல் அளவில் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த ஒரு கணப்பொழுதில், தனது நாட்டில் வசித்து வந்த ஈழ ஆதரவாளர்கள் வீட்டில் திடீர்ச் சோதனைகளையும், கைதுகளையும்

யேர்மனி மேற்கொண்டது. கைது செய்யப்பட்டவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது வழக்குகள் தொடுக்கப்பட்டு, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்ததற்காக அவர்களுக்குப் பல ஆண்டுகள் சிறைத்தண்டனைகளும் வழங்கப்பட்டன.

இவ்வாறான வழக்குகள் யேர்மனியில் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. சிறீலங்காவின் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உத்தியோகப் பூர்வமான தலைவராகப் பணியாற்றிய ஊல்வ் ஹென்றிக்சனின் கூற்றுப்படி, விடுதலைப் புலிகளைத் தடை செய்வதென தனது பொதுவான வெளிநாட்டு மற்றும் பாதுகாப்புக் கொள்கையின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முடிவு. பிரஸ்ஸெல்சில் தேநீர் அருந்தும் இடங்களில் எடுக்கப்பட்ட மிகவும் உயர்மட்ட முடிவாகும்.

(சிறிலங்காவில் உள்ள பன்னாட்டுச் சமூகமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் பல்வேறு தூதரகங்களும், ஐக்கிய நாடுகளும் புலிகளைத் தடைசெய்ய வேண்டாம் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் சொன்னோம். ஆனால்.. அதற்கு மாறாக அனைத்தும் மிக விரைவாகவே நடைபெற்று முடிந்து விட்டன. உங்களது இந்த முடிவுக்குப் பின்னால் அமெரிக்கா இருக்கிறது என்பது புலனாகிறது. இந்தத் தடையைக் கொண்டு வருவதற்கு அமெரிக்காவிடமிருந்தும், ஐக்கிய இராச்சியத்திடமிருந்தும் அதிக அழுத்தங்கள் வந்திருக்கின்றன. ஆனால் இது ஓர் நல்ல முடிவு அல்ல என்று எண்ணும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சார்ந்த உயர்மட்ட அரசியல்வாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்)

இவ்வாறு புலிகளை அழிப்பதற்கு அமெரிக்காவும், ஐக்கிய இராச்சியமும் இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டத்தைத் தமக்கு வேண்டிய விதத்தில் கையாண்டிருக்கின்றன. யேர்மனிய சட்டம் இவ்வாறு கையாளப்பட்ட விதமும், 2010ஆம் ஆண்டில் யேர்மனியில் மேற்கொள்ளப்பட்ட கைதுகளும், சிறீலங்கா அமைதிப் பேச்சு வார்த்தை ஒருபோதுமே நடைபெற்றிருக்கவில்லை என்றும், அமைதிப் பேச்சு வார்த்தைக் காலத்தில் விடுதலைப் புலிகள் பெற்றுக் கொண்ட அடைவுகள் என்று எதுவுமே இல்லை போன்றதுமான ஒரு திரிபை வரலாற்றில் ஏற்படுத்தியது. யேர்மனி முன்னெடுத்த இந்த நடவடிக்கைகள் அனைத்தும் சிறீலங்கா தொடர்பாக அமெரிக்காவும், ஐக்கிய இராச்சியமும் வரித்துக் கொண்ட தமது கொள்கைக்கு இணங்கிச் செல்வதாக அமைந்திருந்தது மட்டுமன்றி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து தம்மை அந்நியப்படுத்திக் கொள்ள தாயகத்திலும், புலம்பதிந்து தமிழ் மக்கள் வாழுகின்ற நாடுகளிலும் உள்ள தமிழ் மக்கள் தூண்டப்பட்டனர்.

2022 - தமிழீழச் செயற்பாட்டாளர்களான நாதன் தம்பியும், ஆனந்தராஜாவும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கப்பட்டதற்கு எதிராக யேர்மனிய நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்துள்ளனர். 2009 இல் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பினால் நம்பிக்கையிழந்திருக்கும் தமிழ் மக்கள், ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான ஓர் போர் தற்போது யேர்மனியில் முன்னெடுக்கப்படுவதாக உணர்கின்றனர். இவ்வாறான பின்புலத்தில், இவ்வாறான வழக்கு விசாரணைகளின் போது ஒரு குறைந்தபட்ச தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்காக, சமரசத்துக்கு இணங்கும் படி இந்த ஆதரவாளர்கள் அழுத்தத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஓர் திறந்த நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகள் தொடர்பாக தாம் ஒருநிலைப்பாட்டை எடுக்கும் பட்சத்தில், தாயகத்தில் எந்தவிதப் பாதுகாப்பும் இன்றி வாழுகின்ற தமது உறவுகளுக்குத் தீங்கு நேரிடக்கூடும் என்றும் இந்த ஆதரவாளர்கள் அச்சமடைகின்றனர்.

இருப்பினும், ஏப்ரல் 2009இல் தொடங்கப்பட்ட மிக அண்மைக்கால வழக்குகளில் நான்கு பிரதிவாதிகளில் இருவரான நாதன் தம்பியும்,


@A.J.ENTERTAINMENTS
AJ
ENTERTAINMENT
PRESENTS
HALLO DEUTSCHLAND!
ANIRUDH
LIVE IN GERMANY
Once Upon a Time TOUR
Rudolf Weber
ARENA
JUNE 10
POWERED BY
tamil.de
portal • lifestyle • entertainment
A CELEBRATION BY
EPIC
MONKEYS




ஆனந்தராஜாவும் இந்த சமரச நிலைப்பாட்டிலிருந்து முற்றாக விலகி, 2007-2009 காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கென நிதியைச் சேகரித்தது 'தண்டனைக்குரிய ஓர் குற்றம் அல்ல' என வாதிடுகின்றனர். 'விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள்' எனக்குத்தப்படும் அநீதியான முத்திரைக்கு எதிராகப் போராட இவ்விருவரும் துணிந்து விட்டனர்.

விடுதலைப் புலிகளை இவ்வாறாகப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கும் முடிவு சட்டப்பூர்வமானது அல்ல என்றும், சிறீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஒரு முக்கிய அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஊறு விளைவித்த ஒரு அரசியல் நோக்கங் கொண்ட ஒரு நடவடிக்கை இது என்றும், இவர்கள் வாதிடுகின்றனர். இந்த இருவரும் விடுதலைப் புலிகளிடமிருந்து தம்மை அந்நியப்படுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்தது மட்டுமன்றி, அப்படிச் செய்வது விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கும் முயற்சியை நியாயப்படுத்துவதாக அமையும் என்றும் கருதுகின்றனர்.

அதற்குப் பதிலாக விடுதலைப் புலிகள் 'தமிழ் மக்களின் நியாயப் பூர்வமான ஒரு விடுதலை அமைப்பு' என்பதையும் இவர்கள் இடித்துரைக்கின்றனர். அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க உதவிய போது, யேர்மனியும் இதே நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. 'புலிகளைப் பயங்கரவாதிகளாகப் பார்ப்பது தான் உண்மையான குற்றம்' என இவர்கள் இருவரும் வாதிடுகின்றனர். அவ்வாறு புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பது, தமது இனவழிப்புக் கொள்கைகளைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கு சிறீலங்கா அரசுக்குக் காட்டும் பச்சைக்கொடி என்றே இவர்கள் அதனை நோக்குகின்றனர்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், யேர்மன் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளும் 2004 அக்டோபரில் சந்தித்த நிகழ்வு பெர்லினில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வன், அரச செயலர், பொருண்மிய ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான யேர்மன் அமைச்சு, திரு.எரிக் ஸ்ராதர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆனால் 2007 நவம்பரில் சிறிலங்கா அரசால் தமிழ்ச்செல்வன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையும், அதே போல புலிகளுக்குப் பயங்கரவாத முத்திரையைக் குத்துகின்ற யேர்மனிய நீதிக்கட்டமைப்பின் செயற்பாடும் 2006ஆம் ஆண்டிலிருந்து ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போரை நியாயப்படுத்தி வருகின்றன. 2009இல் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட படுகொலைகளை மட்டுமல்ல, மிக மோசமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் எவ்வித காரணமும் இன்றித் தடுத்து வைத்தல், சித்திரவதை, பாலியல் வன்புணர்வு போன்றவற்றையும், தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் இராணுவ மயமாக்கல், சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்களில் நடைபெறும் நில அபகரிப்புகள், தமது வரலாற்றை நினைவு கூர்வதற்கான ஈழத்தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுதல் போன்றவற்றையும் யேர்மனிய அரசு இதனூடாக நியாயப்படுத்தி வருகிறது.

இனவழிப்புக்கெதிராகப் போராடிய வேளையில் வீர மரணமடைந்தவர்கள் மற்றும் சிறீலங்கா அரச படைகளினால் கொல்லப்பட்டவர்களை நினைவுக் கூர்தல் போன்றவற்றையும் நியாயப்படுத்தி வருகின்றன. இவ்வாறான வன்முறைகளைத் தொடர்வதற்கான பச்சைக் கொடியைக் காட்டுவதற்குப் பதிலாக, கடந்த காலத்திலும், இன்றும் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் அநீதிகளுக்குக் காரணமாக இருக்கின்ற அமெரிக்கக் கொள்கைக்கு எதிராகவும், யேர்மனி தனது எதிர்ப்பைப் பதிவுசெய்ய வேண்டும். ஓர் அரசியல் நோக்கத்துக்கு ஏற்றவாறு சட்டத்தைத் தாம் விரும்பிய வகையில் பயன்படுத்துதல் உண்மையில் குற்றமாகும்

ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான திடீர் சோதனைகளும், கைதுகளும் 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டன. (இந்தக் கைதுகளுக்கான பிடியாணைகள் 2009 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி வழங்கப் பட்டன) இவ்வாறாகக் கைது செய்யப் பட்டவர்களுக்கு எதிராக, முதலில் யேர்மனியில் உள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்களின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால் இதற்கு எதிராக யேர்மானிய நீதிமன்றங்களில் மேல்முறையீடு செய்யப்பட்ட போது, விடுதலைப் புலிகள் அமைப்பை யேர்மனியைப் பொறுத்த வரையில், ஒரு உள்நாட்டு பயங்கரவாத அமைப்பாக பட்டியற்படுத்த முடியாது என்ற காரணத்தால், அவ்வாறு குற்றம் சுமத்துதல் சட்டபூர்வமானது அல்ல என நிருபிக்கப்பட்டது. கைது செய்யப் பட்டவர்களை சிறையில் தொடர்ந்து வைத்திருக்க, சட்டக் கோவையின் வேறு ஒரு பகுதியைப் பயன்படுத்தி, அவர்கள் மீதுகுற்றம் சுமத்தும் முடிவு அவசர அவசரமாக எடுக்கப் பட்டது.

2010ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 14ம் திகதி இவ்விடயத்தில் ஒரு தீர்ப்பை வழங்கிய நீதிமன்றம், வெளிநாட்டைச் சேர்ந்த ஓர் பயங்கரவாதக் குழுவுக்கு ஆதரவு வழங்கியவர்கள் என்ற அடிப்படையில், யேர்மனிய நீதி அமைச்சு வழக்கைத் தொடுக்க வேண்டும் அன்றேல்,






பிரதிவாதிகள் ஒரு கிழமைக்குள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

இருப்பினும் இவ்வாறான வழக்குகளைத் தொடுப்பதற்கான வாய்ப்பை வழங்கும் சட்டங்களைப் பொறுத்த வரையில் நியாயப் பூர்வமான விடுதலை அமைப்புகளின் ஆதரவாளர்களைப் பாதுகாப்பது, அவற்றின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது (பகுதி *129D* சட்டம்). 'மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் ஓர் அரசுக்கு எதிராக, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்தனரா? இல்லையா?' என்பதை மதிப்பீடு செய்யவும், வழக்குத் தொடர்பான அனைத்துப் பின்புலங்களையும் நீதி அமைச்சு ஆய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. சிறீலங்கா அரசால் நீண்ட காலமாக இழைக்கப்பட்டு வரும் குற்றங்களைப் பார்க்கும் போதும், முன்னெப்போதும் இல்லாத வகையில் அந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளைப் பார்க்கும் போதும்; சட்டத்தில் குறிப்பிட்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகள், மனித உரிமைகளை மதித்த அரசுக்கு எதிராக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகும்.

மேலும் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பான முடிவு 2010ஆம் ஆண்டே எடுக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (*TRO*) போன்ற அமைப்புகளுக்கு நிதி வழங்குவதும், யேர்மனியில் ஒரு சந்திப்புக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்ததையும் பார்க்கும் போது, 'யேர்மனி ஏன் திடீரென தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது? என்ற கேள்வி எழுகிறது.




BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Flugtickete und hotel kann man auch hier buchen
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
الطيران العماني
OMAN AIR
QATAR AIRWAYS القطرية
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com

கல்லெறி வேலுப்பிள்ளை



# "என்ன கொடுமை சரவணா!"

## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. இது மாவீரர் மாதம் கண்டியளோ. எல்லா நாடுகளிலையும் இருக்கிற ஈழச் சொந்தங்கள் மண்ணுக்காக வீழ்ந்த மாவீரர்களை நினைத்து பூசிக்கிற நாள் பாருங்கோ. அதிலையும் தாயகத்தில் இருக்கிற சொந்தங்கள் எதுவுமே செய்ய இயலாத கெடுபிடிக்குள்ள விம்மி அழுது நினைவுகூரும் உணர்வுபூர்வமான நாள் கண்டியளோ.**



ஆனால் இஞ்ச வெளிநாடுகளில நடக்குற சில கூத்துக்கள் சும்மா அடையாளத்துக்கு ஏதோ செய்தால் காணும் எண்டுறதுக்காகவும், மாவீரர் நாளை ஏதோ தங்கட அதிகாரத்துக்கு உட்பட்ட நிகழ்வாகவும் அடையாளப் படுத்திக் காட்டுறதில முன்னிக்கினம் கண்டியளோ. ஏதோ நடக்கிறது நடக்கட்டு எண்டு சனமும் வேற வழியில்லாமல் அமைதியா இருக்கு பாருங்கோ. ஆனால் இது கன நாளைக்கு நீடிக்காது பாருங்கோ.

அது ஒரு புறத்தில கிடக்கட்டு பாருங்கோ. விசயம் என்னவெண்டால் போனமாதம் கனடாவுக்கு போய் தஞ்சமடையிறதுக்காக கப்பலில போன தமிழ் மக்கள் நடுக்கடலில தத்தளிச்சது பற்றி கேள்வி பட்டிருப்பியள். உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டு தமிழர்கள் ஓடுறது இண்டு நேற்றல்ல பாருங்கோ, காலாதி காலமா நடக்குது பாருங்கோ. இந்தமுறையும் அப்பிடித்தான் மியன்மார் நாட்டில இருந்து கிட்டத்தட்ட முந்நூறு பேருக்கும் அதிகமான மக்களை ஏற்றிக்கொண்டு படகு ஒண்டு கனடா நோக்கி புறப்பட்டிருக்கு. படகு புறப்பட்டு சரியாக மூன்று வாரங்களுக்கு பிறகு சீனக்கடல்

பகுதியில, வியட்நாமுக்கும் பிலிப்பைன்சுக்கும் நடுவில இயந்திரக்கோளாறு ஆகி இயங்கமுடியாமல் நிண்டுட்டுது பாருங்கோ. ஆனால் அதுவரைக்கும் காசு வாங்கி ஏத்தின முகவர்மாருக்கு கப்பல் நிண்டது தெரியாது பாருங்கோ. கப்பல் போகுது, இன்னும் இரண்டு கிழமையில கனடா போய்ச்சேர்ந்திடும் எண்டு உறவினருக்கு பொய் சொல்லி உருட்டிக்கொண்டு இருந்திருக்கினை.

கப்பல் இயந்திரக்கோளாறு அடைஞ்சு ஐந்து நாள்வரைக்கும் நடுக்கடலில நிண்ட கப்பலுக்கு தொலைத்தொடர்பு ஏற்படுத்துறதுக்கான பணம் இல்லை. செய்கொள் தொலைபேசி எண்டுறதால அதுக்கு யாராவது மீள்நிரப்பு அடிப்படையில காசு போட்டால்தான் உண்டு பாருங்கோ. காசு வாங்கிப்போட்டு சனத்தை ஏத்தித் தள்ளிவிட்டால் போதும் எண்ட மனப்பான்மையில இருந்த முகவர்மாருக்கு, அந்தக் கப்பலுக்கு ஒரு அவசரம் எண்டால் தொடர்புகொள்ளுறதுக்கான தொலைத் தொடர்பு வசதி கூடச் செய்து குடுக்க முடியேல்லை பாருங்கோ. இலட்சம் இலட்சமாக காசு வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்புற முகவர்கள், தங்கட பையில இருந்து ஒருசதமெனும் இழக்க அணியமில்லை. கப்பலிலே இருந்தவர்கள் வெளிநாடுகளில இருந்த தங்கட உறவுகளைத் தொடர்புகொண்டு அந்தத் தொலைபேசிக்கு காசு மீள்நிரப்பினதால தான் அந்த உறவுகள் வெளியுலகத்திற்குத் தொடர்பு கொள்ள வாய்ப்புக் கிடைச்சது. இல்லையெண்டால் அதுவும் இல்லை பாருங்கோ.

கடைசியில கப்பலில் இருந்த உறவுகள் வெளிநாடுகளில் உள்ள தங்கட உறவுகளுக்கு தொடர்பை ஏற்படுத்தி நடந்த சிக்கலைச் சொல்ல, அப்பதான் ஒவ்வொருதரா விசயம் வெளியில தெரிய ஆரம்பிக்குது. இதுக்கிடையில யேர்மனியில மனித உரிமைகள் அமைப்புக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டு அவர்களும் படகிலுள்ளவர்களை மீட்க ஆவன செய்திருக்கினம். அருகிலுள்ள எல்லா நாடுகளிலும் உள்ள கடலோர காவல் படைகளுக்கும் செய்தி




சொல்லப்பட்டிருக்கு. இறுதியில் அருகிருந்த கப்பலொன்றின்மூலம் படகிலுள்ளவர்கள் மீட்கப்பட்டு வியட்நாமிலுள்ள பாதுகாப்பான இடமொன்றிற்கு கொண்டு செல்லப்பட்டு தங்கவைக்கப்பட்டிருக்கினை பாருங்கோ.

இதெல்லாம் நடந்து முடிஞ்சு, இரண்டு நாள் கழிச்சு ஊரில இருந்த வலையொளி ஊ(ட)கவியலாளர்கள் தொடங்கி, குறுஞ்செய்தி பெருஞ்செய்தி நடத்துறவன் எல்லாம் வாயில வந்த மாதிரி எல்லாம் கதைகளை அவிட்டுவிடத் தொடங்கீற்றானுகள். கப்பலில் வெளிநாட்டுக்கு போகாதேங்கோ எண்டும், இதெல்லாம் வியாபாரம் வேண்டும் புதுசு புதுசா கதைகளை அவிட்டுவிடத் தொடங்கிற்றானுக்கள். அடேய் உங்களுக்கு ஊரில நடக்கிற கஞ்சா வியாபாரம் தெரியேல்லை, யாழ்ப்பாணத்தில அரச வால்பிடி சட்டத்தரணி வீட்டில நடாத்தப்படுற விபச்சாரம் தெரியேல்லை, கேப்பாபுலவில தொடங்கி மன்னார் வரை சிங்கள அரசு நடத்துற நில அபகரிப்பு தெரியேல்லை, ஆனால் சொந்தமண்ணில வாழமுடியாமல் வெளிநாட்டுக்குப் போன தமிழர் கப்பலிலே தத்தளிச்சது தான் கண்ணுக்குத் தெரியுது பார். ஏனெண்டா உன்ர கண்ணுக்கு அப்பிடி ஓர் நோய் வந்திருக்கு . இதுக்கு சரியான வைத்தியம் என்ன தெரியுமே, கையையும் காலையும் கட்டிப்போட்டு

காஞ்சுரண்டி எடுத்து பின்பக்கத்தில செருகவேணும்.


சொந்த மண்ணிலே இருந்து நடந்து போய், கப்பலில போய், படாத துன்பம் எல்லாம் பட்டு, வெளிநாட்டுத் தமிழர் உழைச்சு அனுப்புற காசு தேவை. ஆனால் வெளிநாட்டுக்கு போய் இடையில சிக்குப்பட்டால் அவனை எங்கட மண்ணுக்கு தேவையில்லை எண்ட வகையில அள்ளிவிடுறது. இதெல்லாம் உலகத்தில வேற எந்த இடத்திலையும் நடக்காத விசயம் பாருங்கோ. எங்கட மண்ணில தானே புதுசா நடக்குது.

இதுக்கிடையில வியட்நாமில தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை, நானே சிறிலங்காவின் அரசாங்கத்துடன் கதைச்சு மீட்டேன் எண்டு, கனடாவில் உள்ள ஒரு கோமாளி கதைவிட்டுக்கொண்டு திரியுது. இதுவும் ஓர் புதுப்பைத்தியம் தான். அவருக்கு வாழ்த்து தெரிவிக்கின்ற கூட்டம் வேற அலையலையாக மோதுது. அதாவது அவர் சிறிலங்கா அரசாங்கத்தோட கதைச்சு, அவைதான் கப்பல் அனுப்பியது எண்டு புதுசா ஓர் உருட்டொன்றை உருட்டிவிட்டிருக்கிறார். சரி, சிறிலங்காவில இருந்து கப்பல் அனுப்பின அரசாங்கம், அந்த மக்களை ஏன் வியட்நாமில கொண்டுபோய் விட்டது எண்டு எவனும் கேக்கிறானில்லை. தமிழர் எண்டாலே உடனே சிறிலங்காவுக்கு கொண்டுபோய் அடைச்சு வைச்சு காசு பறிக்க நினைக்கிற அரசாங்கம், ஏன் இந்தளவு தமிழர்களையும் வியட்நாமில் கொண்டு போய் விட்டது எண்டு அந்த கனடா வெடிவித்துவான் சமாதானத்திட்ட ஒருக்கா யாராவது கேட்டுச் சொல்லுறியளே.

ஐயா இராசாக்களே, சொந்த நாட்டில வாழ வழியில்லை எண்டுறது உலகத்திற்கே தெரியும். இதில மேலான அடிமை, கீழான அடிமை எண்டு ஆரும் இல்லை. தயவு செய்து எங்கட சனத்தை நாங்களே கேவலப்படுத்துற வேலை வேண்டாம். அதால வெளிநாடு போறவன் எல்லாம் கீழானவன் எண்டு பொருளில்லை இராசா. அவன் போனால் நாலு பேருக்காவது வாழ்வளிப்பான். அதனாலே உங்கட அரும்பெரும் நாறல் வாய்களை மூடிக்கொண்டு அமைதியா இருந்தாலே உலகம் உருப்பெறும்.

**சிறகு கிடைத்தால் பறப்பது மட்டும் வாழ்க்கையல்ல.
சிலுவையே கிடைத்தாலும் சுமப்பது தான் வாழ்க்கை...!**

-அப்ப வரட்டே


யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2023ஆம் ஆண்டின்
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்





“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

மெல்லிய தூறலாய்
மழை நிலம் நனைக்க

நடுகல்.. கூதலுடன்
குளிர் வாடை
உடல் தழுவிப் போக

நாசி வழியே
சுகந்த மலர்களின்
வாசனை நுழைய
எங்கும் அமானுசிய
அமைதி தவழ
கார் படர்ந்த புகாரினூடே
வெளிர் மஞ்சலாய்

அதோ வளைந்த
வாசல்கள் கொண்ட
கோவில்கள்
கண்களில்
மெதுவாய் புலப்பட
இதோ நிரை நிரையாய்....

## ஒருயிர் மரமே

குளிர் காலத்துக்கு
உன்னை தயார் செய்ய

என்னை மெல்ல மெல்ல
இளம் மஞ்சலாக்கி
சிவப்பாக மாற்றுகிறாய்

பிரிந்து விடப் போகிறேன்
என்று தெரிந்து
மனம் அந்தரிக்கிறது

மழையும் உனக்கு
சாதகமாய் மாற
இதோ உதிர்ந்து
போகிறேன் கீழே

மண்ணோடு கிடந்தாலும்
உன்னுடன் வாழ்ந்த
வசந்த காலங்களை
எண்ணியபடியே
உக்கிப் போகிறேன்

எனது தியாகமே
உனது தொடக்கம்
இதுவே இயற்கையின்
நியதியன்றோ...

**பாமினி, பேர்லின்**

## வெற்றி

முயற்சி செய்து பார் நிறைய
வேதனைகள் கிடைக்கும்
வேதனைகளை தாண்டிப்பார்
உன் வாழ்வில் வெற்றி நிச்சயம்.

வாழ்க்கை எப்போதும்
வெற்றி பெறுவதில் இல்லை
தோல்விகள் தான் நாம் வாழ்வில்
வெற்றி பெற முதல்படிகள்

மிகவும் புத்திசாலித்தனமாக திட்டமிடுங்கள்
அற்புதமான வெற்றியடையலாம்
எப்போதும் நல்ல சிந்தனையோடு
முயற்சியுங்கள் வெற்றி நிச்சயம்.

**நந்தினி, இலண்டன்**

# அகர கவிக்களம்....



### புண்ணியம்!..

கண்ணுக்குத் தெரிந்த
மனிதரை மதிக்காவிட்டால்
கண்ணுக்குத் தெரியாத கடவுளை
வணங்கினாலும் பலனில்லை!..

### தாதியர்கள்!..

மருத்துவமனைகளில்
எல்லா இடங்களிலும்
கடவுளாகக் காட்சியளிப்பவர்
செவிலி என்னும் தாதியர்தான்!..



### சிற்பி!...

என் பணி தொடங்கும்போது
நீ கல், நான் சிற்பி.
என் பணி முடிந்தவுடன்
நீ கடவுள் - நான் தீண்டத்தகாதவன்!..

### சகுனம்!..

மனிதன் குறுக்கே சென்றதால்
ஒரு எலி கூடக்
கிடைக்கவில்லை
பூனை பட்டினியுடன்
அடுப்படி மேட்டில்!..



### நேசிப்பு!..

உன்னைக் கருவறையில்
சுமந்த அம்மா என்னும் தெய்வத்தையும்
உன் கருவைச் சுமக்கும்
மனைவியையும் இறுதிவரை நேசி!..

● **வைரமுத்து சிவராசா, யேர்மனி.**

### வாழ்க்கை

**வாழ்க்கையில்
விதி சத்தமில்லாமல்
விளையாடிவிட்டு
போய்விடுகிறது...
நாம் தான்
சத்தமிட்டு அழுகிறோம்...
விதி வலியது
மதி அதைவிட வலியது**

### நாம் யார்?

**வாழ்க்கையின்
ஒவ்வொரு
நிராகரிப்பும்
அவர்கள் மனதில்
நாம் யார் என்பதை
உணர்த்தும்
அருமருந்து.**

### உறவுகள்

**உயர்ந்து நிக்கும் போது
உயர்த்திப் பேசும் உறவுகள்
விழுந்து கிடக்கும்போது
தோள் கொடுத்து
தூக்கிவிட
வருவதில்லை
ஏனோ?**

# புதிய பாதை நோக்கி தமிழ்த் தேசிய தரப்பு




**வ**ரலாறுகள் பாடங்களைக் கற்பிக்கின்றன. அத்தோடு நமக்கும் வழிகளைக் காட்ட முயல்கின்றன. அந்த வகையில் மலையகக் கட்சிகளின் அண்மைய ஒற்றுமையான செயற்பாடு ஒரு முன்னுதாரணமாகப் பேசப்படும் நிலை உருவாகியிருக்கிறது.

தமிழ்த் தேசிய அரசியலில் 2001ஆம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் ஒரு முன்னேற்றகரமான மாற்றத்துக்கான முயற்சியாகப் பார்க்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் முயற்சி அந்நேரத்தில் தேசிய ரீதியிலும், சர்வதேச அளவிலும் பாராட்டவும் பட்டது. ஆனால் இப்போதைய நிலையில் தமிழ்த் தேசியத் தரப்பின் ஒற்றுமை எள்ளி நகையாடுகின்றதொன்றாக மாறிவிட்டது கவலையானதே!.

தமிழ்த் தேச விடுதலைக்காகப் போராடிய இயக்கங்கள் தமக்கிடையே பிளவுபட்டு, மோதுண்டு பின் ஒருங்கிணைந்து, பிளவுண்ட வரலாறு எமக்குரியது. அதன் பின்பும் கூட ஜனநாயக அரசியல் பரப்பில் தமிழ்த் தேசியத்தின் அவசியம் உணரப்பட்டு, முரண்பட்ட அனைவரையும் இணைக்கப் பாட்டுக்கு அழைத்து, ஒற்றுமை வலுவாக்கப் பட்டது. இந்த ஒற்றுமை, இந்த இணைப்பு சிலரது தனிப்பட்ட கட்சி, தனிப்பட்ட செல்வாக்கு, தனிப்பட்ட அபிலாசைகளுக்குத் தாரை வார்க்கப்படக் கூடாது என்பது, தமிழ்த் தேசியத்தை நேசித்த, நேசிக்கும் ஒவ்வொருவரதும் அவாவும், ஆதங்கமும் ஆகும்.

இலங்கை தமிழ் காங்கிரசில் ஆரம்பித்த சமஅந்தஸ்து பிரச்சனை 50 க்கு 50. அன்றைய ஆட்சியாளர்கள் 50க்கு 48 தான் தருவதாகச் சொல்ல, 50க்கு 50 தந்தாலே தீர்வை ஏற்பேன், இல்லையேல் அதை பெறும் முறையில் பெறுவோம் எனச் சவால் விட்டு கிடைத்ததையும் இழந்தனர்.

அதன்பின் இலங்கை தமிழரசுக்கட்சி, வட்டுக்கோட்டை தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, சமஸ்டி முறையிலான தீர்வு எமக்குத் தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, தேர்தலில் களம் இறங்கியது. இந்தப் போக்கும் சாத்தியப்படாது போகவே, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டனர்.

அதன்பின் ஆயுதப்போராட்டம் வலுவடைந்து இருந்த காலங்களில் நடைபெற்ற தேர்தலில், தனிநாட்டுக்கான அங்கீகாரத்திற்கான தேர்தலாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இந்த காலகட்டத்தின் இடையே ஏற்பட்ட மாற்று சூழல்கள் அயலுறவுக் கொள்கைக் காரணமாக 1987இன் பின் மாகாண அமைப்பு முறை, வடக்கு-கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி பற்றிய கருத்தாடல்களும், அதற்கான தேர்தல் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக ஈழக் கோரிக்கையைக் கைவிட்ட ஈபிடிபி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற காட்சிகள் இதனை முன்னெடுத்தன. இதனை அன்று புலிகளும், தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பும் எதிர்த்தனர்.

அதன்பின் 2,000களுக்குப் பின் நடைபெற்ற தேர்தலிலும், புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கும் வரை ஒரு நாடு - இரு தேசம் கோட்பாடு சமஸ்டியை அடியொற்றிப் பேசுபொருளாக இருந்தது. மேலும் 2008க்கு பின் வடகிழக்கு மாகாணம், வடக்கு, கிழக்கு எனப் பிரிக்கப்பட்டன. அவ்வேளையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண தேர்தலை பகிஸ்கரித்திருந்தது. இரண்டாவது கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. அதேபோல் வடக்கு மாகாண சபையின்

முதலாவது தேர்தலை எவ்வித பகிஸ்கரிப்பும் இன்றி எதிர்கொண்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தாம் தேர்தல் பகிஸ்கரிக்கும் போதெல்லாம் அதில் பங்குகொண்ட கட்சிகளைத் துரோகிகள் என்று குறிப்பிட்டனர். தாம் அதில் பங்கேற்ற போது இந்தத் துரோகம் என்ற வார்த்தை காணாமல் போக, மாறாக இருப்பதையாவது பெற்றுக்கொள்வோம். எமது இருப்பை காப்பாற்றுவோம் என்ற வாக்குறுதிகளும், கோரிக்கைகளும், பிரச்சாரங்களிலும் முன் நகர்த்தப்பட்டன.

இத்தகையதொரு சூழலில் காலத்துக்குக் காலம் தமிழர் தரப்பு ஆட்சி அதிகாரத்திற்காக முன்வைத்தத் தீர்வு திட்டங்களை நோக்கின் 50க்கு50, இது காணாமல் போய்விட சமஸ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதுவும் காணாமல் போய்விட, தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதுவும் போய்விட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உருவான வடக்கு கிழக்கு இணைந்த மாகாண கோரிக்கையும், இடைக்காலத்தில் தீர்வாகத் திகழ்ந்தது.

இடையில் புலிகளின் பலம் ஓங்கிய காலத்தில் மீண்டும் இரு தேசம் - ஒரு நாடு என்ற கோரிக்கையும், புலிகள் நலிவடைந்த போது இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண கோரிக்கையும் இரு தேசம் - ஒரு நாடு, சமஸ்டி என்ற பல்வேறு கோரிக்கைகளும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற பேச்செல்லாம் தேர்தல் பிரச்சாரமாக அமைந்தன. ஆயினும் எவையுமே நடைபெறவில்லை.

மேலும், இவ்வாறான சூழலில் தமிழ் தரப்பில், தமிழ் கட்சிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகியும், புதிய கூட்டுக்களை உருவாக்கியும், புதிய கட்சிகளை உருவாக்கியும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்கள் அனைவரும் தமிழருக்குத் தீர்வு பெற்று தருவதாகக் கூறுகின்றனர்.

இந்த வகையில் கடந்த 74 ஆண்டு கால இலங்கை அரசியல் வரலாற்றில் முன்வத்து, இலங்கை அரசால் நிராகரிக்கப்பட்ட தீர்வுகளைச் சர்வதேசமும், இந்தியாவும் எமக்குப் பெற்றுத்தரும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் தாம் தேர்தலில் போட்டியிடுவதாகவும், நிச்சயம் அது சாத்தியப்படும் என ஒவ்வொருவரும் அடித்துக் கூறினர். ஆனால் இவற்றை நம்பி ‘இலவு காத்த கிளிபோல்’ தமிழ் மக்கள் இருப்பது வேதனை தரும் ஒரு விடயமாக இருக்கிறது.

தமிழ் தரப்பு அரசியலைப் பொறுத்தவரையில் கடந்த 74 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் சலுகையா? உரிமையா? என்ற ஒரு பிரச்சார இறுவட்டை



வைத்துள்ளனர். காரணம் எல்லா இனங்களும் அபிவிருத்தி, சலுகைகளைப் பெற்று முன்னேற, தமிழினம் மட்டும் எந்த உரிமைக்காகவும், எந்த அபிலாசைகளுக்காகவும் இரத்தம் சிந்தி, உயிர்த் தியாகம் செய்து, சொத்து இழந்து, உறவு இழந்து, உடைமைகள் இழந்து, புலம்பெயர்ந்து, அகதிகளாக, அங்கவீனர்களாக இயல்பு வாழ்வைப் பெற முடியாமல் பரிதவிக்கும் நிலை. மறுபுறம் சிறைவாசமும், காணாமலாக்கப் பட்டோர். இன்னொருபுறம் யுத்தத்தின் கோரப்பிடியில் நடந்த இழப்புகளும், போராட போனவர்களுடைய சண்டையில் இடம்பெற்ற சகோதரப் படுகொலைகளும், இருந்த இருப்பையும், பொருளாதாரத்தையும், தொழில் வாய்ப்பையும், கல்வியையும் அழித்து விட்டது.

இந்த வகையில் வடக்கு - கிழக்கு தமிழ்த்தேசிய தரப்பில் முன்வைக்கப்பட்ட கருத்துகள், பிரகடனங்கள், பிரச்சாரங்கள் பிசுபிசுத்துப் போயுள்ளன. மக்களிடத்தில் எடுபடாமல் போயுள்ளன. எனவே, மக்களுக்கு நல்லதைச் செய்யுங்கள். புதிய சிந்தனைகள் பிறக்கட்டும். புதிய வியூகங்களை மலரட்டும். புதிய பாதை அமைப்போம் என்ற கோசமும் உருவாகி வருகிறது. ஆனால் தமிழர் அரசியல் வெற்றுத்தாளாக மாறிவிடாது பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும் உருவாகியிருக்கிறது.

அந்த வகையில்தான், தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய கட்சிகளுக்கிடையேயான ஒற்றுமை முயற்சிக்கு, முன்னுரிமை கொடுக்க வேண்டிய கடப்பாடு அனைத்துத் தமிழ் அரசியல் தரப்பினருக்கும் இருக்கிறது என்ற கருத்து வெளிப்படத் தொடங்குகிறது. இது, தமிழ் தேசியப் பரப்பில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகளை, ஒருமித்த கருத்தின் அடிப்படையில் இணைத்து, கொள்கை அடிப்படையில் ஒரு பொது வேலைத் திட்டத்தை முன்வைத்து, கட்சிகளுக்கிடையே நிரந்தரமான ஒற்றுமையைக் கொண்டுவர வேண்டும். இல்லாதுவிடின் தமிழர் அரசியல் மேலும் மேலும் மோசமடையும் என்பதே நிச்சயமும், நிதர்சனமுமாகும்.

இனப்பிரச்சினைக்கப்பால், சம காலத்தில் தமிழ் மக்களைப் பாதிக்கின்ற விடயங்கள் மற்றும் தமிழ் மக்களின்



அத்தியாவசியமான பிரச்சினைகள் யாவற்றையும் தீர்வுக்குட்படுத்துவதற்காக வேனும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள கட்சிகள் கொள்கை வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபடுவது காலத்தின் கட்டாயம்.

அந்த வகையில், தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் அனைவரும் சரியான தீர்மானம் எடுக்கும் சந்தியில் நிற்கின்றோம் என்பதனை மனதில் கொண்டு, தற்போதைய ஜனாதிபதி, அரசு மற்றும் இலங்கை பாதுகாப்புத் தரப்பின் செயற்பாடுகள், சிங்களப் பேரினவாதத் தரப்பினரின் நெருக்கடிகளை எதிர்கொள்ளவதற்காக அணிதிரள்வதன் முக்கியம் உணரப்படுகிறது. அதனை சரியாகப் பயன்படுத்துவது யாரின் ஊடாகவேனும் நடைபெறலாம். அதற்காக எந்த விட்டுக்கொடுப்புக்கு நாம் தயார் என்ற நிலைப்பாட்டைத் தமிழ் அரசியல் தரப்புகள் எடுத்தாக வேண்டும். ஜப்பான், தென் ஆபிரிக்கா போன்ற முன்னுதாரணங்களை முன் நிறுத்தியதான அரசியலைத் தமிழர்கள் கையாள முயல்வதும், தமிழ்த் தேசியத் தரப்புக்கு நல்லதாக இருக்கலாம்.

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் அனைவரும் தமிழ் மக்களுக்குச் சரியான வழித்தடத்தைக் காண்பிக்க வேண்டும். தனிப்பட்ட அமைப்பு நலன், தனிப்பட்ட கட்சி நலன், தனிப்பட்ட நபர் சார்ந்த நலன் எவையும் இது தொடர்பான தீர்மானம் எடுக்கும் போது கருத்தில் கொள்ளப்படாது, தமிழ்த் தேசிய நலன் மட்டுமே முன்நிற்கட்டும். குற்றப்பத்திரிகைகளை வாசிப்பதனை நிறுத்தி, மக்களுக்காகத் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.


Melliyalsarees
மெல்லியள்
சாரிஸ்
மலிவு
விற்பனை
+49 176 24650540
Rheinische Strasse 29
DORTMUND




ஏலையா க.முருகதாசன்

# உளவு நிறுவனங்கள்

உலக நாடுகளை அதன் பொருளாதாரக் கட்டமைப்புக்கும், இராணுவக் கட்டமைப்புக்கும், தொழில்துறைக்கு ஏற்றவாறும் பிரிப்பின்,

1.அனைத்து நாடுகளுக்குள்ளும், அனைத்துக் கட்டமைப்புகளிலும் அதிநவீன தொழில் நுட்பங்கள் கொண்ட அதிஉச்ச நாடுகள். 2.வல்லமை உள்ள ஐரோப்பிய நாடுகள், 3.வல்லமை கொண்ட ஆசிய நாடுகள் 4.வல்லமை உள்ள ஆபிரிக்க நாடுகள் 5.வல்லமை உள்ள அரேபிய நாடுகள் 6.மத்திய வல்லமை உள்ள ஐரோப்பிய நாடுகள், 7.மத்திய வல்லமை உள்ள ஆசிய நாடுகள் 8.மத்திய வல்லமை உள்ள ஆபிரிக்க நாடுகள் 9.மத்திய வல்லமை உள்ள அரேபிய நாடுகள் 10.வறுமையும், மிகுந்த வறுமையும் உள்ள நாடுகள் எனப் பிரிக்கலாம்.

இந்தக் கணிப்பீட்டுக்கு உட்படுத்தியும், நாடுகளைப் பகுத்து வைத்தும் அதற்கமையவே உளவு நிறுவனங்கள் மற்றைய நாடுகளுக்குள் தமது உளவு வேலையைச் செய்கின்றன.

ஆசிய நாடுகளில் எவை எவை வல்லமை கொண்ட நாடுகளாக இருக்கின்றனவோ, அவற்றை உளவு நிறுவனங்கள் கையாள்வதற்கும், வறுமை உள்ள நாடு, வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ள நாடு என இவற்றைக் கையாள்வதற்கும், ஐரோப்பிய நாடுகளில் உள்ள வறுமை உள்ள நாடுகளைக் கையாள்வதற்கும் பாரிய வேறுபாடு உண்டு.

ஆசிய பிராந்தியத்தில் உள்ள வறுமை நாடுகளையும், வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள நாடுகளுக்குள் உளவு நிறுவனங்கள் தங்கு தடையின்றி நுழைவதற்குக் காரணம் ஆட்சியாளர்களின் தேசிய உணர்வற்ற ஆட்சி நிர்வாகமும் அதற்கு முக்கிய காரணமாகி விடுகின்றது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைவது சாதாரண விடயமல்ல. அதுமட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றையும் மற்றைய ஐரோப்பிய நாடுகள் உளவு பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன.

ஆசிய நாடுகளில் பலம் பொருந்திய நாடுகளாக இருப்பவை இந்தியாவும், சீனாவும். இந்த இரு நாடுகளின் உளவு நிறுவனங்கள் நீண்ட பல ஆண்டுகளாகவே ஐரோப்பிய நாடுகளுக்குள் ஊடுருவி, தமது உளவு வேலைகளைச் செய்து வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளின் கணிணியுக நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தொழிற்சாலைகளிலும், ஐரி நிறுவனங்களிலும் அதுசார்ந்த

பணியாளர்களின் பற்றாக்குறை ஏற்படுவதால் இந்தியாவிலிருந்து இத்துறைசார் பணியாளர்கள் இங்கு வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் முறையே ஜேர்மனி, பிரான்ஸ், ஒல்லாந்து, பெல்ஜியம், ஆஸ்திரியா நாடுகள் தமது பொருளாதார இராணுவக் கட்டமைப்புகளிலும், தொழில்துறைசார் கட்டமைப்புகளிலும் பலம் பொருந்தியவை.

இவற்றின் இக்கட்டமைப்புகளையும், அவை தொடர்ந்து ஏறுமுக வளர்ச்சியில் இருப்பதையும் உலக நாடுகள் வியப்புடன் பார்க்கின்றன.

இந்நாடுகள் இந்தியாவிலிருந்து துறைசார் விற்பன்னர்களைப் பணி நிமித்தம் பணியாளர்களாக வரவழைத்து, பணியில் இருத்துகிறார்கள். குறிப்பாக இந்தியாவுக்கும், இந்த நாடுகளுக்கும் இடையில் அரசியல் ரீதியாகவும் பலமான தொடர்பு உண்டு.

இன்று பரவலாக இந்நாடுகளில் குறிப்பாக நவீன தொழில்துறைகளுக்குப் பெருந்தொகையான பணியாளர்களை ஜேர்மனி வரவேற்று பணிகளைக் கொடுத்து வருகின்றது.

இதற்கு முன்னரும் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், வணிகத்துறை சார்ந்தவர்களாகவும், தொழிற்சாலை தொழில் நுட்பவியலாளர்களாகவும், மருத்துவ நிலையங்களில் தாதிகளாகவும் இந்தியர்கள் வேலை செய்யத் தொடங்கி விட்டனர்.

ஆரம்பத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஜேர்மனியில் பல்துறைகளில் வேலை செய்தவர்களில் கணிசமான தொகையினர் இந்தியாவின் உளவுத்துறை ஒற்றர்களாகவும் வேலை செய்ததுடன், அவர்கள் ஜேர்மனியின் தொழில்துறை, வணிகத்துறை, மருத்துவத் துறை, விவசாயம், போன்றவற்றில் காணப்படும் அணுகுமுறை நுட்பங்களை இந்தியாவுக்குத் தொடர்ந்து கடத்திக் கொண்டே இருந்தது போல, இன்று இந்திய தொழில்நுட்ப பணியாளர்களுள் றோவின் ஒற்றர்கள் ஜேர்மனிய இரகசியங்களைக் கடத்திக் கொண்டேயிருக்கிறார்கள். இந்திய உளவுத்துறை சீராக இயங்குவதற்கு அத்துறைக்குக் கட்டுப்பாடற்ற நிதி ஒதுக்கீடு உண்டு.

இவர்களில் சில ஒற்றர்கள் ஜேர்மனிய இராணுவ இரகசியங்களை ரஸ்யாவுக்கு விற்றுக் கொண்டே இருக்கிறார்கள். இன்னும் சில இந்திய ஒற்றர்கள் இந்தியாவுக்குத் தெரியாமல், சீனாவுக்கு ஜேர்மனிய இரகசியங்களை விற்றுக் கொண்டேயிருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து ஜேர்மனியில் உள்ள பல்கலைக் கழகங்களில் பல்துறை சார்ந்து படிக்கும் மாணவர்கள், பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்களால் கற்பிக்கப்படும் கல்வியின் அணுகுமுறையினைக் கூர்ந்துக் கவனித்து, தமது படிப்புக்கென அவற்றைச் சிரத்தையுடன் உள்வாங்குவதற்கப்பால் இங்குள்ள கல்வி முறையினையும், பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்படும், உணர்த்தப்படும் தொழில்துறை சார்



நுட்பங்களையும் இந்திய உளவு நிறுவனங்களுக்குத் தெரிவித்து வருகின்றனர்.

நூறு மாணவர்களில் ஐம்பது இந்திய மாணவர்கள்; இந்திய உளவு நிறுவனமான றோவுக்காகவும் உளவு பார்க்கின்றனர். இவர்களுக்குப் படிப்புச் செலவுக்கப்பால் இந்தியாவில் உள்ள இவர்களின் பெயரில் உள்ள வங்கிகளுக்கு உளவுத்துறை சார்பாக வேறொரு நிறுவனங்கள் வாயிலாக பணம் வைப்பில் இடப்படுகின்றது.

ஜேர்மனி பல்வேறு தொழில்துறைக்குத் தேவையான பாரிய இயந்திரங்களைச் செய்கின்ற நாடு. ஒரு இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் ஒவ்வொன்றும், அந்த உதிரிப் பாகங்களைச் செய்கின்ற தொழிற்சாலைகளைத் தவிர்ந்த எந்தவொரு தொழிற்சாலையுமே அதனை உற்பத்தி செய்யக் கூடாது என்ற தொழிற்துறைச் சட்டம் கடுமையாகக் கடைப்பிடிக்கப் படுகின்றது.

அது ஒரு அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச சட்டமாக உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்தந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் இயந்திரங்களாகட்டும், உதிர்ப் பாகங்களாகட்டும் அவை வடிவமைப்புப் பதிவாக நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது.

இன்னும் ஐரோப்பிய நாடுகளில் இவை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. பாரிய இயந்திரங்களின் உதிரிப் பாகங்கள், உதிரிப் பாகங்களால் இணைக்கப்பட்ட இயந்திரங்கள் யாவும், பதிவு செய்யப்பட்டு வேறு எவருமே அது போல் உற்பத்தி செய்யக்கூடாது விதி உண்டு.

இவை யாவற்றையும் உன்னிப்பாக தமது மூளைக் கலங்களுக்குள் உள்வாங்கும் இந்தியப் பணியாளர்கள் அதனை இந்தியாவுக்குக் கடத்தி வருகின்றனர். அதே வேளை இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சியை நன்கு அறிந்து கொண்ட ஜேர்மனிய தொழில்துறை அறிஞர்கள், ஜேர்மனியில் இருக்கின்ற இந்தியர்களால் தமது இரகசியங்கள் கடத்தப்படும் என்பதை மிக நன்கு அறிந்தவர்களே!.

எந்தச் சூழ்நிலையிலும் இந்தியப் பணியாளர்கள் மூலம் தமது தொழில்நுட்ப இரகசியங்கள் இந்தியாவுக்குக் கடத்தப்படக் கூடாது என்பதற்காக, இந்தியப் பணியாளர்களின் தொலைபேசி உரையாடல்களை அவர்களுக்குத் தெரியாமலே உளவு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு உளவு நிறுவனம் ஒற்றர்கள் தொலைபேசி வாயிலாக தகவல்களைத் தெரிவிப்பதற்கான இரகசிய சொல்லாடல்களை நாடுகளின் நிலைக்கேற்பவே பயன்படுத்துகின்றன.

வறுமை மிகுந்த நாடுகளிலிருந்து, வெளிநாட்டவர்கள் மூலம் உளவு நிறுவனங்களுக்குப் போய்ச் சேரும் இரகசிய சொல்லாடல்களை உள்வாங்கி, அது சார்ந்த வல்லமையாளர்களால் பகுத்துப் பார்க்கும் நவீன வசதி இருக்காது. அதனால் இரகசியங்கள் உளவு நிறுவனங்களுக்குப் போய்ச் சேருவதில் எவ்விதத் தடையும் இருக்காது.

ஆனால் ஒவ்வொரு விடயத்தையும் அக்கு வேறு, ஆணி வேறாகப் பிரித்துப் பார்க்கக் கூடிய ஐரோப்பிய நாடுகளின் புலனாய்வுப் பிரிவினர் கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக, இந்தியாவில் உள்ள ஒருவருடன் பேசும் போது இயல்பாக பேசும் வார்த்தைகள், அதன் போது இருமுதல், தும்முதல், கொட்டாவி விடுதல் பலவகையான சிரிப்பொலிகள் மூலம் இரகசியங்களைத் தெரியப்படுத்தலைச் செய்கின்றனர்.

சுகம் விசாரிப்பதற்காக எழுதும் கடிதங்களில் புள்ளியிடுதலில் வித்தியாசம் காட்டுதல், எழுதியதன் மேல் கோடு இழுத்துவிட்டு எழுதுதல் போன்று பல்வேறு முறைகளில் இந்திய மாணவர்கள், இந்திய பணியாளர்கள் தமது உளவு நிறுவனங்களுக்குத் தகவல்களைத் தெரிவித்துக் கொண்டே வருகின்றனர். அதற்கான பயிற்சிகளைக் கொடுத்தே பலரை பணியாளர்கள் என்ற போர்வையில் ஐரோப்பிய நாடுகளுக்கு இந்திய உளவு நிறுவனம் அனுப்பி வைக்கின்றது.

(தொடரும்)



AJ ENTERTAINMENT
tamil.de
IN ASSOCIATE WITH
01-JAN
2023
IBC தமிழ்
PRESENTS
உறவின் 3ம்
GERMANY DORTMUND
4PM ONWARDS
NANDY'S CURRY'S & MORE
AGAM
ANJAARA
anjaara.com
FREDENBAUMHALLEN, BURGWEG 16-22, 44145 DORTMUND
SPONCERS
TAMILKINO.NRW
TamilShop
TT Box
Thushi-Deko
Jasmine Silk House
Jaffna MÜNSTER
RE/MAX
IMMOBILIE VERKAUFEN?
PALAZIO
VV Ponniah
MAITHILIE'S Boutique
CENTURY
ortel MOBILE
PHOTOGRAPHY SPONCERS
DESIGNING PARTNER
infonits
MAKEUP PARTNER
ABINII
MEDIA SPONCERS
Lankasri
அகரம்
tamil.de
ETR
www.ibctamil.com | 004920197779544

பாகம் : 30

**ஆய்வாளர் சேது, அமெரிக்கா**

இலங்கை சுதந்திரம் அடையும் பொழுது, தமிழர்கள் சிங்களர்களின் மீது எந்த அச்சமும் கொள்ளவில்லை. இதற்குக் காரணம் தமிழர்களின் கற்பிதங்கள் சிங்களர்களின் மீது பயம் கொள்ளும் படியாக பாரபட்சமாக இல்லை. மேலும் தமிழ் அரசியல்வாதிகள் பய உணர்வைத் தூண்டும் விதமாகப் பேசவில்லை. அவ்வாறு பேசினாலும் ஓரவஞ்சனை இல்லாமல் எடுபட்டிருக்குமா? என்பது சந்தேகமே!.

ஆனால், சிங்களர்களிடம் தமிழர்கள் மீதான வெறுப்பு, அவர்களின் மகாவம்ச கட்டுக்கதைகள் மூலம் கட்டியமைக்கப் பட்டிருந்தது. அவர்களுக்கு அதிகாரம் கிடைத்தவுடன், தமிழர்களுக்கு எதிரான அரசியல் சூடு பிடித்தது. இலங்கை இனப்போர் என்பது, இலங்கை விடுதலை அடையும் முன்னரே மகாவம்ச கட்டுக் கதைகளால் தீர்மானிக்கப்பட்ட ஒன்று. இதை நாம் அறியவில்லை. இன்றும் இலங்கை அரசியல் மகாவம்சத்தால் தீர்மானிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது என்கிறார் புரூசு கேப்வரர்.

இந்தியா சுதந்திரமடையும் முன்னர் திராவிடநாடு கோரிக்கை எழுந்தது, ஆனால் மக்களிடம் பெரிய ஆதரவு இல்லை. அண்ணா திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டதற்கு முக்கிய காரணமாகக் கூறுவதும் இதே ஆதரவின்மை தான். இதற்கு முக்கியக் காரணம் என்ன? என்பதை குறியீட்டு அரசியல் தத்துவத்தின் மூலம் அறியலாம். தமிழக மக்கள் என்றுமே இந்தியாவை அச்சுறுத்தலாகப் பார்க்க வில்லை. பெரும்பாலான மக்கள் ஏற்றுக் கொண்ட கற்பிதங்கள், பொதுவாக இந்திய கற்பிதங்களுடன் ஒத்து செல்கின்றன.

ஆரிய திராவிட கற்பிதங்கள் உருவாக்கப்பட்டு, பரப்பப்பட்டாலும், அவை அச்சுறுத்தலை உருவாக்காமல், ஒரு இணக்கப்பாடு அல்லது மீள் பங்கீடு அரசியலை நோக்கியே நகர்த்தியது. இந்திய தேசியத்திற்கு உயிர்விட்ட தமிழர்களின் எண்ணிக்கை திராவிட நாட்டுக்கு உயிர் விட்டவர்களைவிட(?) அதிகமானது. இது மக்களிடம் திராவிட நாடு கற்பிதங்கள் பரப்பப் படவில்லை அல்லது உணர்வுப் பூர்வமாக ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பதையே காட்டுகிறது.

### தலைவர்களின் கருத்துருவாக்கம்

இன அரசியலில் தலைவர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். ஓர் இனம் இன்னொரு

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்



இனத்தைப் பற்றி ஓரவஞ்சனை கொண்டிருந்தாலும், அது ஒரு அரசியல் தலைவரின் கருத்துருவாக்கம் இல்லாமல், இனப்பகை ஏற்படுவதில்லை. தலைவர்களால் இனங்களுக்கிடையே பகையையும் உண்டு பண்ண முடியும், அதே நேரம் பகையைத் தனித்து அமைதியையும் நிலை நாட்ட முடியும். அதை அவர்கள் கருத்துருவாக்கம் மூலம் செய்கிறார்கள். கருத்துருவாக்கம் என்பது சிக்கல் என்ன? தீர்வு என்ன? எவ்வாறு தீர்வை நடைமுறைப் படுத்துவது? என்று தெளிவு படுத்தும். எப்படிப்பட்ட கருத்துருவாக்கத்தையும் கொண்டு அவர்களால் வெற்றி பெறமுடியாது. எப்பொழுது அவர்களின் கருத்துருவாக்கம் குறியீட்டு சார்புகளை ஒத்து இருக்கிறதோ, அப்பொழுதுதான் மக்களின் ஆதரவு பெருகும். சுருக்கமாகக் கூறினால் தலைவர்கள் கருத்துருவாக்கம் மூலம் தலைமை தங்குகிறார்கள்.

அக்கருத்துருவாக்கம் சாதகமான உணர்வலைகளை ஏற்படுத்தினால், மக்கள் ஒன்று திரள்வர். அவ்வாறான ஒன்று திரட்டல் வன்முறையில் முடிய வேண்டும் என்று அவசியமில்லை. காந்தி இதை சத்தியாகிரகப் போராட்டங்களாக மாற்றி அமைத்தார். ஒரு சமூகம் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குவதால், அனைத்தையும் இணைத்து, ஒரு முக்கிய கருத்துருவாக்கத்தின் கீழ் கொண்டு வருவர். பெரும்பாலும் அநீதி என்ற மையக் கருத்துருவாக்கம் இன மோதல்களில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தலைமை, நம்பிக்கைக்கு உரிய தலைமையாக இருக்கவேண்டும். தலைமை சுயநலம் கொண்டதாக இருந்தால், மக்களை ஒன்று திரட்டமுடியாது.

எவ்வளவு தூரம் இனங்களுக்கிடேயே ஓரவஞ்சனை இருக்கிறதோ, அவ்வளவுதூரம் தலைவர்களின் பேச்சில் உண்மை இருக்க வேண்டிய அவசியமில்லை. எளிதாக மக்களை உசுப்பிவிட்டு, இன்னொரு





Radio - by - Phone
18 ஆம் ஆண்டில்....
ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!
00 4934 5483411998
தொலைபேசி இலக்கத்தில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60
மேலதிக விபரங்களுக்கு...
www.etr.fm
மகிழ்வுடன்....
அகரம்
அகர தீபம்
ETR NEWS
ETR Music

இனத்திற்கு எதிராக அணி திரள வைப்பர். ஆனால் இது தலைவர்களுக்கு ஆபத்தானதும் கூட. உசுப்பிவிட்டு பின்வாங்கினால், அவரின் ஆதரவாளர்களாலேயே உயிரிழக்க நேரிடலாம். இலங்கையின் பண்டார நாயக்கே, "சிங்கள மொழி மட்டும்" என்ற கருத்துருவாக்கத்தைக் கொண்டு சிங்களவர்களே உசுப்பி விட்டு வெற்றி கொண்டார். ஆனால் பின்னர் தமிழர் எதிர்ப்பினால் பின்வாங்க ஆரம்பித்த பொழுது, ஒரு சிங்களராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கைத் தீவு புத்த தர்மத்திற்காக கடவுளால் அளிக்கப்பட்டது என்று மகாவம்ச புராணக் கதைகளினால் சிங்கள தேசிய கருத்தியலை கட்டமைத்துள்ளனர். அதுபோலவே இந்துத்வாவும், இராம இராச்சியம் அமைப்போம், இந்தியா ஒரு 'இந்து தேசம்' என்ற கருத்தியலை புராணங்கள் மூலம் கட்டியமைத்திருக்கிறார்கள். இவ்வாறு அவர்களது கருத்துருவாக்கம் மக்களிடம் உள்ள கற்பிதம் சார்ந்த குறியீடுகளுடன் ஒத்து வருவதால், மக்கள் அவ்வியக்கங்களுக்கு ஆதரவு அளிக்கின்றனர்.

திராவிட அரசியல் என்பது பகுத்தறிவு இயக்கத்திலிருந்து வந்தது என்றாலும், அவர்களின் வெற்றிக்குக் காரணம் பகுத்தறிவு அல்ல. அன்று மக்களிடம் பரப்பப்பட்ட ஆரிய-திராவிட கற்பிதங்கள், மொழிப் பற்று, திரைப்படங்கள், உணர்வுப் பூர்வமான மேடை பேச்சுகள், சமூக நீதி ஆகியன மக்களின் உணர்வுகளைத் தூண்டி, அவர்கள் பக்கம் இழுத்தது. அவர்கள் மக்களின் உணர்வுகளை வென்றதால்தான் அவர்களால் அரசியலில் வெல்ல முடிந்தது.

## அமைப்புகள்

கருத்துருவாக்கம் குறியீட்டு சார்புகளுடன் ஒத்து இருக்கும்பொழுதே ஆதரவு பெருகும். ஆனால் அது மட்டும் மக்களை அணி திரட்டிவிடாது. மக்களைப் பல்வேறு அமைப்புகள் மூலம் ஒரு வலைப் பின்னலாக இணைக்க வேண்டும். கருத்துருவாக்கம் என்பது வான்போர் போன்றது; வலைப்பின்னல் என்பது தரைப்போர் போன்றது. இரண்டு போர்களையும் சரியாக நடத்தினால்தான் மக்கள் அணிதிரள்வர்.

எவ்வளவு திறமை வாய்ந்த பேச்சாளராக ஒரு தலைவர் இருந்தாலும், அவர் நாடு முழுவதும் பரவலாக அடிமட்ட அளவில் அமைப்புகளை உருவாக்க விட்டால், அவரால் மக்களை அணி திரட்ட முடியாது. அந்த அமைப்புகள் மக்களின் குறியீட்டு சார்புகளைத் ஒத்து இருக்கும் பொழுது, மக்கள் அமைப்புகளில் இணைகின்றனர். ஒரே அமைப்பு என்றில்லாமல், பல்வேறு வேறுபட்ட அமைப்புகளின் ஆதரவு கிடைக்கும் பொழுது, மக்களை அணி திரட்டுவது எளிதாகிறது.

காந்தி அடிகளுக்கு மக்களை ஒன்று திரட்ட நாடு முழுவதும் இருந்த காங்கிரசு கட்சியின் அமைப்புகளும், அவரின் ஆசிரமங்களும் துணையாக இருந்தன. இன்று இந்துத்வா அமைப்புகள் நாடு முழுவதும் பல்வேறு கிளைகளை உருவாக்கி, இந்துக்களின் குறியீட்டு சார்புகளைக் கொண்டு, அவர்களின் அமைப்புகளில் சேர்த்து வருகிறது. மேலும் சிறுவர்களைக் கற்பிதங்கள் மூலம் அவர்களை இந்துத்துவ அரசியலுக்கு ஏற்றவாறு உணர்வுப் பூர்வமாக வளர்த்து வருகிறது. இந்த அமைப்புகள்தான் இந்துத்வ அரசியலின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணம். அவர்கள் மனிதர்களின் குறியீட்டு சார்புகளின் தன்மையை நன்றாக உணர்ந்து, அதைப் பயன்படுத்துகின்றனர்.

திராவிட, தமிழ் அமைப்புகள் பகுத்தறிவின் மூலம் மக்களை ஈர்த்து விடலாம் என்ற நோக்கில், இந்துத்வாவை எதிர்கொள்ள அமைப்புகளைப் பெரிதாக உருவாக்கவில்லை. அவ்வாறு கட்சி அலுவலகங்கள் இருந்தாலும், அது மக்களை குறியீட்டு சார்புகள் மூலம் உணர்வுப் பூர்வமாக ஈர்ப்பதில்லை. அவ்வாறு உணர்ச்சி இருந்திருந்தால், ஈழ இனப்படுகொலை நடந்த பொழுது மாபெரும் போராட்டம் நடந்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக போராட்டம் செய்பவர்கள்தான்

ஒடுக்கப்பட்டார்கள். உணர்ச்சி அற்ற அமைப்புகளால் மக்களை ஒன்று திரட்ட முடியாது.

மக்களை இயக்கங்களில் சேர்ப்பதற்கு தனி மனிதத் தொடர்பு முக்கியமானது. தொடர்பு கொள்ளும் மனிதர் தெரிந்தவர், உறவினர், நண்பர் என்றால் அவர்களை இணைப்பது எளிதானது. மக்களை இணைப்பதில் அனைத்து சாதகமான சம்மதிக்க வைக்கும் உளவியல் முறைகளும் கையாளப்படுகின்றன.


## இன எழுச்சிக்குத் தேவையான நிலைமைகள்

இதுவரை பார்த்ததிலிருந்து, ஓர் இன எழுச்சி ஏற்பட பல சாதகமான நிலைமைகள் இருக்கவேண்டும். இனங்களுக்கிடைய ஓரவஞ்சனை இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ஒரு இனத்தின் மீது இன்னொரு இனத்திற்கு அச்ச உணர்வு இருப்பதில்லை. அப்படி இருக்கும்பொழுது, தலைவர்கள் எவ்வளவு கூச்சலிட்டாலும் மக்கள் கேட்கப் போவதில்லை. இனங்களுக்கிடையே ஓரவஞ்சனை இருந்தாலும், தலைவர்கள் அதைப் பயன்படுத்தி கருத்துருவாக்கம் செய்ய வேண்டும். மேலும் தலைமை நம்பிக்கையுள்ள தலைமையாக இருக்க வேண்டும். நம்பிக்கையற்றவர்கள் பேசினால் எடுபடாது. எதிர்கொள்ள முடியாதபடி அதீத அடக்குமுறை இருந்தாலும், எழுச்சி ஏற்படாது. தலைவர்கள் நாடு முழுவதும் பரவலான அமைப்புகளை ஏற்படுத்தி, மக்களை ஒருங்கிணைக்க வேண்டும்.

மேலுள்ள நான்கு நிலைமைகளும் சாதகமாக இருக்கும்பொழுதே எழுச்சி ஏற்படும். ஏதாவது ஒன்று இல்லாவிட்டாலும் எழுச்சி ஏற்படாது. இதனால்தான் இன எழுச்சி என்பது அவ்வளவு எளிதில் ஏற்படுவதில்லை. மக்களை அரசுக்கு எதிராக அணிதிரட்ட உதவும் மற்ற காரணிகள் என்னவென்றால், மக்கள் பெரும்பான்மையாக உள்ள நிலம், ஏழ்மை, திடமற்ற பலவீனமான அரசு, அரசியல் உரிமை மறுப்பு ஆகியன.

இனங்களுக்கிடையேயான ஓரவஞ்சனைதான் இனச்சிக்கலுக்கு அடிப்படைக் காரணம். அரசியல் தலைமைகள், அமைப்புகள் என்பதெல்லாம் அதைப் பயன்படுத்தி வெற்றி கொள்வதே. ஓரவஞ்சனை என்பது உடனடியாக உருவாக்கப்படுவதல்ல. இது வரலாற்றுக் கற்பிதங்கள் மூலம் நீண்ட காலமாக ஒரு சமூகத்தில் நிலவுவது. இதை எளிதில் மாற்ற முடியாததுதான் பல இனச்சிக்கல்களுக்குக் காரணம். சிங்களர்கள் மகாவம்ச வரலாற்றுக் கற்பிதங்கள் மூலம், தமிழர்கள் அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்தவர்கள் என்ற வெறுப்பு இட்டு கட்டப்பட்டுள்ளது. அந்த வெறுப்பு இருக்கும் வரை ஒரே நாட்டில் இன அமைதி என்பது சாத்தியப்படப் போவதில்லை.


THOOYA COMMUNICATION






Rheinische Str 80
44137 Dortmund




Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

# IMPOrtas

*International Foods & Beverages*

www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch




சர்மிலா வினோதினி

# இலங்கையின் பொருளாதாரமும் மத அரசியலும்

தேவாரப் பாடல் பெற்றதும், திருகோணமலையின் அடையாளமுமாக இருக்கிற திருக்கோணேச்சரம் சிவாலயமும், முல்லைத் தீவின் தண்ணி முறிப்பு குளத்தை அண்டியிருக்கிற குருந்தூர் மலையும் இன்றைக்கு ஏன் பேசு பொருளாகியிருக்கிறது? இவ்வளவு காலமும் இல்லாத கவனக்குவிப்பு எதற்காக இங்கு நிகழ்த்தப்படுகிறது? உண்மையில் இந்த ஆலயங்களின் பெயரைப் பயன்படுத்தி என்னதான் நடக்கிறது? இந்த வினாக்களுக்கு விடையைத் தேட வேண்டுமாக இருந்தால் இலங்கையின் சமகால சமூக பொருளியல் நிலைமைகளை எளிய முறையில் புரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய பொருளாதாரக் கொள்கைகள், நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்த சூழ்நிலைகள், வருமானம் தரக்கூடிய தொழிற்சாலைகள் பல மூடப்பட்டமை மற்றும் கடந்த சில வருடங்களாக நிலவி வந்த கொரோனா பெருந்தொற்றும், அதனால் நிகழ்ந்த வருமான இழப்புகள் மற்றும் உற்பத்தித் திறனற்ற சேவையை முதன்மைப் படுத்திய அரச தொழில் முறைமை போன்ற பல்வேறு விடயங்கள் இலங்கையின் பொருளாதாரச் சரிவிற்குக் காரணமாகிய காரணிகளாகும்.

இவற்றின் தாக்கங்கள் படிப்படியாக நிகழ்ந்து, கையிருப்பில் இருந்த அன்னியச் செலாவணியின் இருப்பு குறைவடைந்து, நாடு பாரிய சவால்களை எதிர்கொண்டது. இதன் பின்னணியில் காலிமுகத் திடலில் நடைபெற்ற மக்கள் எழுச்சி, நாட்டில் ஆட்சி மாற்றங்களையும் நிகழ்த்தியது. எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடும், நகரப்பகுதிகளில் எழுந்த பாரிய உணவு நெருக்கடியும் மக்களை ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ந்தெழ வைத்தது.

காலிமுகத்திடலில் போராட்டங்கள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தபொழுது, நாட்டின் நகரப் பகுதிகளோடு ஒப்பிடுகையில் கிராமப் பகுதிகளில் உணவு நெருக்கடி



மிகமோசமாக மக்களை பாதித்திருக்கவில்லை. உணவு உற்பத்தித் திறனை கொண்டிருக்கிற கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மீன், மரக்கறி, பால் மற்றும் பழவகைகள் போன்ற உணவுப்பொருட்களை நகரங்களை நோக்கி விற்பனைக்காகக் கொண்டு செல்லுவதற்கான எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, உற்பத்திக் கிராமங்களில் இருந்து உணவு வெளிக்கொண்டு செல்லுவது மட்டுப் படுத்தப் பட்டிருந்தது. இதனால் கிராமிய பொருளாதாரம் பாதுகாப்பானதாக இருந்தது. குறித்த கிராமத்தில் உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களை, அந்தக் கிராமத்திலேயே குறைந்த விலையில் நுகரக்கூடிய வாய்ப்பும் மக்களுக்குக் கிடைத்தது.

ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை முற்றிலும் வேறானது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவதற்கான வழியாக, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்த முன்னெடுப்புக்கள் பார்க்கப்படுகிற போதும், சர்வதேச நாணய நிதியத்தினால் உடனடியாக இலங்கைக்கு உதவிகளை வழங்கிவிட முடியுமா? என்றால் அதுவும் இல்லை. இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்தோடு மேற்கொள்ளப்படுகிற ஒப்பந்தங்கள், இலங்கைக்குக் கடன் வழங்க முன்வருகிற நாடுகளை இலங்கை மீது நம்பிக்கை கொள்ளச் செய்யும். இந்த அடிப்படையில் கடன் வழங்க முன்வருகிற நாடுகளிடம் இருந்து கடன்களைப் பெற்று, நாட்டு நிலைமைகளைச் சீராக்குவதற்குக் கால தாமதங்கள் எழும்.

இது ஒருபுறம் இருக்க, நாட்டின் களஞ்சிய சாலைகளில் இதுவரை சேமிப்பில் இருந்த உணவுப் பண்டங்களின் கையிருப்பும் குறைவடைந்து வர, நாட்டிற்கு வெளியில் இருந்து இறக்குமதி செய்ய முடியாத நிலைமையும் எழுகிறபோது, வருங்காலத்தில் உணவுப் பொருட்களுக்கான விலையேற்றத்தோடு நாடு பாரிய உணவு நெருக்கடியைச் சந்திப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. கடந்த காலிமுகத்திடல் போராட்டக் காலத்தை விடவும், மோசமான நெருக்கடி நிலைமைகளை நகர மக்கள் மட்டுமன்றி, கிராம மக்களும் சந்திக்க நேரும் என்கிறார்கள் பொருளியல் நிபுணர்கள்.

நாட்டில் கிடைக்கக் கூடிய எரிபொருளானது, உற்பத்திக் கிராமங்களில் இருந்து உணவுப் பொருட்களை, கேள்வி




அதிகமாக இருக்கக்கூடிய நகரப்புறங்களை நோக்கி காவிச்செல்லும். இந்தச் சூழ்நிலை கொள்வனவு சக்தியைக் கொண்டிருக்கக் கூடிய ஒரு சில மக்கள் கூட்டத்தினருக்கு மட்டும் உணவு கிடைப்பதற்கு வழி செய்யும். இதனால் கிராமத்திலும், நகரத்திலும் நிலவக்கூடிய உணவுப்பொருட்களுக்கான அதீத விலையில், அவற்றைக் கொள்வனவு செய்யமுடியாத மக்கள், பட்டினியை எதிர்கொள்ளுவார்கள். நாடு முழுவதும் எழக்கூடிய இந்த நிலைமை, இம்முறை கிராமங்களில் வசிக்கிற சாமானிய சிங்கள மக்களையும் பாதிப்படையச் செய்யும். இதனால் அவர்கள் அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. இவ்வாறான ஒரு நிலைமை உருவானால் நாட்டில் மீளவும் அமைதியின்மை ஏற்படுவதோடு, அரசுக்கு எதிரான நிலைப்பாடுகள் வலுவாகும். எனவே இவ்வாறான ஒரு நிலைமையைச் சமாளித்து, ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய தேவை அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு அவசியமாகிறது.

இதன் பின்னணியில் மக்களுடைய கவனத்தை, மத ரீதியாகத் திசை திருப்பும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. சிங்கள மக்களிடம் இந்திய மற்றும் இந்து எதிர்ப்பு மனோநிலை இயல்பாகவே குடிகொண்டிருக்கிறது. வரலாற்று ரீதியாக நிகழ்ந்த, தமிழ் மன்னர்களுடைய படையெடுப்புகள் மற்றும் பிற்காலத்தில் நிகழ்ந்த தமிழ் ஆயுதக் குழுக்களுக்கான இந்திய உதவிகள் போன்ற பல காரணிகள், இந்தியா மீது சிங்கள் மக்கள் வெறுப்புணர்வை வளர்ப்பதற்குக் காரணமாகியது. ஆனால், பிற்கால அரசியல் நிலைப்பாடுகளுக்கு ஏற்ப, இலங்கையில் தமிழர் தாயகம் அமைவதை, இந்தியா விரும்பவில்லை என்கிற புரிதல் சாமானிய சிங்கள மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. அத்தோடு அண்மையில் நாடு சந்தித்த பொருளாதார சரிவின் போது, இந்தியா உடனடியாக கடன்களை வழங்கி, இலங்கைக்குக் கரம் கொடுத்து உதவியதும், இந்திய வெறுப்பை சிங்கள மக்கள் மத்தியில் குறைப்பதற்கான காரணிகள் ஆகியிருக்கிறது.

அத்தோடு இந்தியாவையும், இந்து மதத்தையும், தமிழர்களையும் இணைத்துப் பார்க்கிற மனோநிலை சிங்கள மக்களிடம் இருக்கிறது. இந்தப் பின்னணியில் ஈழத்தவர்கள் சைவர்கள் என்கிற சரியான புரிதல் அற்று, இந்து மத எதிர்ப்பினைத் தூண்டிவிடுவதன் ஊடாக, சாமானிய சிங்கள மக்களை தமிழர்களுக்கும், இந்தியாவிற்கும் எதிராக தூண்டிவிடும் செயற்பாடுகள்





SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
21ஆம் ஆண்டில்....
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648
மாபெரும்
ராஜ
முத்திரை

மேற்குலக மற்றும் சர்வதேச திசை திருப்பும் வல்லுனர்களின் வழிகாட்டுதல்களோடு மேற்கொள்ளப் படுகின்றது என்பதுதான் சிந்திக்க வேண்டிய விடயமாகிறது. முல்லைத் தீவின் குருந்தூர் மலை மற்றும் திருக்கோணேச்சரர் ஆலயம் ஆகியவற்றில் நடைபெறுகிற மத முரண்பாட்டு செயற்பாடுகள் இவற்றையே சுட்டி நிற்கின்றன.

தற்போது ஆட்சியில் இருக்கிற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், தான் ஆட்சிக்கு வருகிறபோது தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்குவப் போவதாக குறிப்பிட்டிருந்தார். அத்தோடு வெளிநாட்டில் இயங்குகின்ற தமிழ் அமைப்புக்களுக்கான தூதரகங்களை அமைப்பது வரை, பல முயற்சிகளை கையில் எடுத்த நிலையில் அமைச்சரவையின் தலையீட்டுடன், குருந்தூர் மலையில் நிகழுகிற மத முரண்பாடுகளுக்குச் சுமூகமான முடிவுகளை எடுப்பதற்கான வாய்ப்புகள் இருந்தும், அவற்றைக் கண்டுகொள்ளாமல் இருப்பதன் பின்னணி மத முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதும், அவற்றைத் தமது அரசியலுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முனைவதுமன்றி, வேறில்லை என்பது வெளிப்படையான உண்மை.

இந்த நிகழ்ச்சி நிரலில் தமிழ் அரசியல் தலைமைகள் மிக அவதானத்தோடு செயற்பட வேண்டியது அவசியமாகிறது. உணர்ச்சிக் கொந்தளிப்பில் குறித்த இடங்களுக்குச் சென்று, ஆர்ப்பரித்து அதனை அரசுக்குச் சாதகமாக்காமல், அரசோடு சேர்ந்து இயங்குகிற அரசியல் தலைவர்களுக்கு எதிரான கேள்விகளை முன்வைத்து, அவர்களுக்கு எதிரான முயற்சிகளைத்தான் முன்னெடுக்க வேண்டும். தன்சார்ந்து இயங்குகிற தலைவர்களது செல்வாக்கு, மக்கள் மத்தியில் குறைவடைவதை ஆளும் தரப்பு ஒருபோதும் விரும்பப் போவதில்லை. எனவே, அரசுக்கு முண்டு கொடுக்கிற தமிழ் அரசியல் தலைவர்களுக்கு எதிராக கேள்விகளைக் கேட்பதன் மூலம், இந்த விடயங்களைச் சாதகமாகக் கையாள முடியும் என்பது அரசியல் ஆய்வாளர்களது கருத்தாகும்.




24 மணிநேர தகவல் உதவிச் சேவையுடன்

V BOX



300 க்கும் மேற்பட்ட Channels மற்றும் 5,000க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்

இப்போது அனைத்து நாடுகளிலும்




வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்

**REACH OUR DISTRIBUTORS**

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780

## 5. மயூர விநியோகஹ

மயூராஸ்யே லதாயாம்ச சகுனே வமனேதா / அலகஸ்யாபநயனே ல்லாடதிலகேஷச / நத்யுதகஸ்ய நிக்ஷேபே சாஸ்த்ரவாதே ப்ரஸித்தகே / ஏவமர்தேஷுயுஜ்யந்தே மயூரகர பாவனாஹ

### கருத்து



| | |
|---|---|
| மயூராஸ்யே | மயில் |
| லதாயாம்ச | கொடி |
| சகுனே | சகுனப்பறவை |
| வமனேத்தா | வாந்தி எடுத்தல் |
| அலகஸ்யாபநயனே | தலை முடியில் சிக்கு எடுத்தல் |
| லலாடதிலகேஷூச | பொட்டு வைத்தல் |
| நத்யுதகஸ்ய நிக்ஷேபே | நதியின் நீரை தலையில் தெளித்தல் |
| சாஸ்த்ரவாதே | சாஸ்திரம் பற்றி கூறுதல் |
| ப்ரஸித்தகே | பிரசித்தம் |

**ஏவமர்தேஷுயுஜ்யந்தே மயூரகர பாவனாஹ**

## 6. அர்தசந்ர விநியோகஹ

சந்ரே கிருஷ்ணாஷ்ட்டமீபாஜி கலஹஸ்தார்தகேபிச/ பல்லாயுதே தேவதானாம் அபிஷேசனக் கர்மணி / புக்பாத்ரேச உத்பவே கட்யாம் சிந்தாயாம் ஆத்மவாசகே / த்யானேச ப்ரார்தனேசாபி அங்கானாம் ஸ்பர்ஷனேததா/ ப்ராக்ருதானாம் நமஸ்காரே அர்தசந்திரோ நியுஜ்யதே /

### கருத்து

| | |
|---|---|
| சந்ரே | சந்திரன் |
| கிருஷ்ணாஷ்டமீபாஜி | 8வது தேய்பிறை சந்திரன் |
| கலஹஸ்தார்தகேபிச | கழுத்தை பிடித்து தள்ளுதல் |
| பல்லாயுதே | பல்லாயுதம் (ஈட்டி) |
| தேவதானாம் அபிஷேசனக்கர்மணி | இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் |
| புக்பாத்ரேச | சாப்பிடும் தட்டு |
| உத்பவே | பிறப்பு |
| கட்யாம் | இடை |
| சிந்தாயாம் | சிந்தனை செய்தல் |
| ஆத்மவாசகே | உயிர் (நான்) |
| த்யானேச | தியானித்தல் |
| ப்ரார்தனேசாபி | பிரார்தனை செய்தல் |

அங்கானாம் ஸ்பர்ஷனேததா அங்கங்களை தொடுதல்

ப்ராக்ருதானாம் நமஸ்காரே பெரியவர்களை நமஸ்கரித்தல்

**அர்தசந்திரோ நியுஜ்யதே**

## 7. அராள விநியோகஹ

விஷாதி அம்ருத பானேஷு ப்ரசண்ட பவனேபிச /

### கருத்து

| | |
|---|---|
| ஷாதி அம்ருத பானேஷு | விஷம், அமிர்தம், பானம் குடித்தல் |
| ப்ரசண்ட பவனேபிச் | புயல்காற்று |

## 8. சுகதுண்ட விநியோகஹ

பாணப்ரயோகே குன்தார்தே ஆலயஸ்ய ஸ்மிருதிக்ரமே/ மர்மோக்த்யாம் உக்ரபாவேஷு சுகதுண்டோ நியுஜ்யதே /

### கருத்து

| | |
|---|---|
| பாணப்ரயோகே | அம்பு எய்தல் |
| குந்தார்தே | ஈட்டி |
| ஆலயஸ்யஸ்மிருதிக்ரமே | பழையனவற்றை நினைத்தல் |
| மர்மோக்த்யாம் | முணுமுணுத்தல் |
| உக்ரபாவேஷு | கடுங் கோபம் |

**சுகதுண்டோ நியுஜ்யதே**

அகரம் வாசகர்களுக்கு அன்புக்குரிய வணக்கம்.

கடந்த ஓராண்டு காலமாக அகரம் மாத இதழின் ஊடக, உங்களோடு பரதத்தின் தோற்றம் முதல் இன்று விநியோகம் வரை பற்றி பார்த்து கொண்டு இருக்கின்றோம். நான் ஒரு பரதநாட்டிய ஆசிரியையாக ஏழு ஆண்டுகள் கடமை ஆற்றி வந்தாலும், நான் படித்தவற்றை எனது மாணவர்களுக்குக் கற்பிற்பது மட்டும் இல்லாமல், அகரம் இதழில் எழுதுவதின் மூலம் வரும் காலத்தில் நான் எழுத இருக்கும் ஒரு பரதநாட்டிய புத்தகத்துக்கும் இது ஒரு முதல் அனுபவமாக அமையும் என்பதில் ஐய்யம் இல்லை.

அகரம் இதழில் எழுத தொடங்கியதின் பின், நம் ஈழத்து மக்களால் நான் நன்கு அறியப்பட்டேன். அதற்கு நான் அகரம் இதழ் அங்கத்தவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளேன். அதை விட அகரம் இதழ் அதிக வாசகர்களால் வாசிக்கப் படுகிறது என்று தெரிய வந்துள்ளது. அகரம் இதழ் சுவிஸ் இல் மட்டும் இல்லாமல் ஜேர்மன், பிரான்ஸ், நோர்வே, ஹொலண்ட், லண்டன் போன்ற நாடுகளில் வசிக்கும், நம் ஈழத்தவர்களால் வாசிக்கப் படுகிறது. இதை நான் உணர்ந்து கொண்டேன்.

இத்தகையான வாய்ப்பை தந்த அகரம் ஆசிரியர் குழுவிற்கு மிக்க நன்றி. பரதம் என்பது ஒரு பெரிய கடல். அதில் நான் ஒரு சிறு அலை, கடலின் ஆழத்தை யாரும் அடைய முடியாது. ஆனால் அடையவதற்கு முயற்சிக்கலாம். என் முயற்சி எழுத்து மூலம் இன்னும் தொடரும் என் அன்பு வாசகர்களே! அகரம் இதழ் இன்னும் மென்மேலும் வளர நான் வாழ்த்துகின்றேன். அடுத்த இதழில் மற்றும் சில விநியோகங்களைப் பார்ப்போம்.

சிறுகதை

சபீனா சோமசுந்தரம்

# தீக்குள் விரலை வைத்தால்



'ஒரு வழியா முடிச்சாச்சு...' என்று ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்து உட்கார்ந்தாள் அவள். கை விரல்களால் கழுத்தை அழுத்தியபடி, எதிரில் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தாள். அது 1.30 ஐ காட்டியது.

அவள் எழுதும் முதலாவது நீண்ட கதை அது. க்ரைம் தொடர் ஒன்றிற்காக வாராவாரம் அவள் எழுதிக் கொண்டிருக்கும் நெடுங்கதையில், அடுத்த வாரத்திற்கான பகுதியை எழுதி முடித்து, மெயிலில் அனுப்ப நள்ளிரவு 1.30 ஆகி விட்டிருந்தது.

வேலையை முடித்தத் திருப்தியோடு எழுந்து சென்று ஸோபாவில் விழுந்து படுத்தாள். அலுவலக வேலையுடன், இந்த எழுத்து வேலை என்று நாள் முழுவதும் ஏற்பட்ட களைப்பில் கண்கள் சொருகியது அவளுக்கு. மெல்ல இமைகள் மூடியது.

ஒரு கடினமான கை, ஆனால் மென்மையான ஸ்பரிஸத்தோடு, அவளது கால்களை அழுத்தியது.

வீட்டில் யாரும் இல்லை. அப்படி இருக்கையில் யார் எனது காலை பிடிப்பது? என்று திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள்.

எதிரில் அவன் அமர்ந்திருந்தான். அழகான மெல்லிய புன்னகையோடு, பின்னால் திரும்பி கதவைப் பார்த்தாள். அது பூட்டியிருந்தது. ஜன்னல்கள்? அவையும் பூட்டி இருந்தது.

அப்படியென்றால் யார் இவன்? எப்படி உள்ளே வந்தான்?

பயத்தில் இதயம் நின்றுவிடும் போல இருந்தது. மூச்சு முட்டியது. வியர்த்துக் கொட்டியது.

எதிரில் அமர்ந்திருப்பவனை பார்த்தாள்.

ஐந்தரை அடிக்கும் சற்று கூடிய உயரம், நேர்த்தியாக கத்தரித்து விடப்பட்ட மீசையும், அளவாக கொஞ்சமாக ஷேவ் செய்யப்பட்ட தாடியும் அவனுக்கு அத்தனை அம்சமாக இருந்தது.

கறுப்பு நிற ஸேட் அணிந்திருந்தான். கழுத்திற்கு கீழே ஒரு பட்டனை மாத்திரம் திறந்து விட்டிருந்தான்.

'ச்சேக்... யாருன்னே தெரியல.. இப்பிடி வழிஞ்சிட்டு, ரசிச்சட்டு இருக்கனே... என்ன மானெங்கெட்ட மனசு நமக்கு...' என்று தன்னைத்தானே மனதிற்குள் திட்டியபடி. 'க்க்கும்;ம்ம்...' என தொண்டையைச் செருமிக்கொண்டு,

'யார் நீங்க..?' என்றாள். பயம் வேறு வந்து மனதிற்குள் ஒட்டிக் கொண்டது.

அவன் ஒன்றும் சொல்லவில்லை. புன்னகையோடு அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

'யார் இவன்..? கதைக்க வராதோ...!' என்று மனதிற்குள் யோசித்தபடி, அப்பொழுது தான் கவனித்தாள் அவன் இன்னும் அவளுடைய கால்களைப் பற்றியபடியே அமர்ந்திருந்தது.

பயம் அதிகரித்தது, காலை விடுவிக்க முயன்று மெல்ல இழுத்தாள். அவன் இன்னும் மென்மையாக பற்றிப் பிடித்தான். அவளுக்கு இதயம் வேகமாக அடிக்கத்தொடங்கியது.

'ஒரு வேளை பேயாக இருக்குமோ!' என்ற நினைப்பு வர, குப்பென வேர்த்தது அவளுக்கு. இதயத்துடிப்பின் வேகம் இன்னும் அதிகமானது. மீண்டும் அவன் யாரென்று கேட்கலாம் என்றால் தொண்டை வரண்டு பேச்சு வரவில்லை பயத்தில்.

'ஐயோ... கடவுளே..! பிள்ளையாரப்பா...! முருகா...!! என்னை நீங்க தான் காப்பத்தனும்...' என்று மனதிற்குள் ஓலமிட்டாள்.

'பேசாம கண்ணை இறுக்கி மூடிட்டு, அப்பிடியே படுத்துத் தூங்கிடுவமா..?' என்று நினைத்தாள்.

அந்நேரம் அவள் காதுகளில் விழுந்தது அவன் குரல்.

"என்னைத் தெரியலயா..?" என்ற அந்த கரிசனையான, கம்பீரமான குரலில், அவள் நெஞ்சில் நிறைந்திருந்த பயம் காணாமல் போனது.

ஆனாலும் அவன் யாரென்று தெரியவில்லை. யோசித்து பார்த்தாள். ஹீம்ம்ம் தெரியவேயில்லை, ஞாபகமேயில்லை.

"சொறி... தெரியலயே... சொன்னீங்கன்னா.. கண்டுபிடிச்சிடுவன்..." என்றாள் அவள்.

அவன் சிரித்தான். பதிலுக்கு "உன்னையல்லால் என்னை யாரறிவார்...?"




என்றான் ஒரு ராகத்தோடு.

'ஸ்ஸ்ஸப்பா.. சொல்லி தொலைடா...' என்றிருந்தது அவளுக்கு.

"ப்ளீஸ் எனக்கு தெரியல.. நீங்க சொல்லுங்களன்... அதவிட நீங்க இங்க எப்பிடி வந்தீங்கன்னு சொல்லுங்க முதல்ல..." என்றாள் அவள்.

"என்னை யாரென்று நீ கேட்பது வேடிக்கையாக இருக்கிறது..." என்று சொல்லிச் சிரித்துவிட்டு, மெல்ல அவள் முகத்தினருகே குனிந்தான்.

அவனுடைய சுவாசத்தின் வெப்பம் அவள் நாசியில் அடித்தது. சரெலென பின்னால் நகர்ந்து உட்கார்ந்தாள். அவள் கால்களைப் பற்றியிருந்த அவனது கைகளில் ஒன்று, அவள் நகர்ந்த அதே வேகத்தில், அவள் இடையை வளைத்து அணைத்துப் பிடித்தது. அவளால் நகரவும் முடியவில்லை, அவனது நெருக்கத்தை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

நிமிர்ந்து அவனது கண்களை பார்த்தாள். அதில் காதலும், ஆசையும் நிறைந்திருந்தது.

"நீ... நீங்க... யாரு...ன்னு.. சொல்லுங்களேன்..." என்றாள் தடுமாறிபடி.

"உன் காதலன்.. அனு அனுவாய் நீ ரசித்து கொண்டாடும் உன் நாயகன்..." என்றான் அவன்.

'இது என்னடா புது கதையா இருக்கு...! நமக்கு அப்பிடி யாரும் சரி வராதே.. ம்ம்ம்...' என்று யோசித்தாள்.

அவன் தன்னுடைய ஒற்றை விரலால் அவள் தாடையைத் தொட்டு நிமிர்த்தி, "புது கதை எல்லாம் இல்லை.. நீண்ட கதை இது.." என்றான்.

'ஐயோ... இவன் மைண்ட் றீட் பண்ணுறானே...' என்று திகைத்தாள்.

"உன்னை என்றும் நானறிவேன்..." என்றான் அவன்.

"ஐயோ எனக்கு விசர் தான் வருது.. யார் நீங்க...?" என்று சற்று குரலை உயர்த்தி கோபமாக கத்தினாள் அவள்.

அதற்கும் பதிலுக்குப் புன்னகைத்துவிட்டு,

"அவன் அழகன்... அவன் பேச்சு அப்படி... அவன் நடை அப்படி... இப்படி... என்றெல்லாம் உவமைக் கொட்டி, ரசனை சொட்டச் சொட்ட எழுதி, என்னை படைத்தவள் நீ தானே...! அப்போ இந்தக் கதாநாயகனின் நாயகி நீ இல்லையா..?" என்றான் கண்களில் காதலோடு.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. 'என்ன சொல்கிறான் இவன்? நான் யாரை ரசித்தேன்?'

கூட வேலை செய்பவர்கள், உறவினர்கள், தினந்தோறும் போக்குவரத்தில் சந்திப்பவர்கள், மாமா, அத்தை மகன்கள் என்று தனக்குத் தெரிந்த எல்லா ஆண்களையும் பற்றி யோசித்தாள்.

'ஹீம்ம்ம்.. யாரையுமே ரசிக்கல. பின்ன வேற யாரு...?' என்று யோசிக்க, எங்கோ அவள் நினைவில் ஓர் பொறி தட்டியது.

அவனே தான், அவள் கதையில் வரும் அவளுடைய கதாநாயகன். அப்படியென்றால் இவன்? ஆனால் எப்படி? அது வெறும் கதை. அது கதையில் வரும் கதாபாத்திரம்.

அவள் விழிகள் ஆச்சரியமும், பயமும் ஒன்று சேர விரிந்தது. நிமிர்ந்து அவனை பார்த்தாள். கண்களால் அவனை அளந்தாள்.

ஆம்! அவனே தான்!. அந்த உயரம், அந்த அழகான தாடி, மீசை, கம்பீரமான குரல் எல்லாம் அவள் உருவாக்கியவை தான்.

அது எப்படி சாத்தியம்? எழுத்தில்

உருவாக்கிய ஒரு உருவம், உயிர் பெற்று வருவது எப்படி சாத்தியம்? ஒரே குழப்பம்.

ஆனாலும் அவன் யாரென்று தெரிந்தபிறகு, அவனுடைய மூச்சின் வெப்பமும், இடையை வளைத்திருந்த கையின் அழுத்தமும், என்றும் தொடர்ந்தால் என்னவென்றிருந்தது அவளுக்கு.

“ஆனா... எப்பிடி இதெல்லாம்...?' நான் ஜஸ்ட் எழுதின ஒரு விசயம், எப்பிடி உயிரோட வர முடியும்...?” என்றாள் குழப்பமாக.

“எனக்குத் தெரியாது... ஆனால் நீ தினமும் பல ஆண்களைக் கடந்து வருகிறாய்... பல ஆண்களோடு நட்பு பாராட்டுகிறாய்.. ஆனால் உன் நினைவுகள் மட்டும் எப்போதும் என்னையே சுற்றி இருக்கிறதே...? அது ஏன்...?” என்றான் அவன் புருவங்களை உயர்த்தி, கேள்வியாய் அவளை பார்த்தபடி.

“ஆ... அ... அது வந்து... நீங்க நான் எழுதுற கதைட ஹீரோ... ஸோ.. அதனால எப்பவும் எப்பிடியெல்லாம் எழுதலாம்னு... உங்கள பத்தியே நினைச்சிட்டு இருக்கன்... இது ஒரு பிழையா...? இதில என்ன இருக்கு...?” என்றாள் அவள்.

“இல்லை.. உனக்கு என் மீது காதல்...” என்றான் அவன்.

“லவ்வா... நல்லா ஜோக் பண்ணுறீங்க.. நீங்க...” என்று சொல்லி சிரித்தாள் அவள்.

“அப்படியென்றால் எனக்கு உன் மீது காதல்... நான் உன்னை நேசிக்கிறேன்...” என்றான் அவன்.

அவளுடைய சிரிப்பு மறைந்தது. முகத்தில் கவலை குடிகொண்டது.

“நீங்க... என்ன சொல்லுறீங்க...?” என்றவள் “நான் நினைக்கிறன்... இது கனவு என்டு...” என்றாள் உதட்டைச் சுழித்து யோசித்தபடி.

“கனவோ நிஜமோ.. உன் நாயகன்

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

நான் தான்...” என்றான்.

அவள் இயலாமையோடு அவனை பார்த்தாள். மீண்டும் மெல்ல புன்னகைத்தான். இப்போது கூட எத்தனை அழகு அவன் புன்னகை.

“கண்ணை மூடு...” என்றான்.

அவள் ஏன்? என்பது போல் பாத்தாள்.

“மூடு...” என்றான் அழுத்தமான குரலில்.

அவள் கண்களை மூடினாள்.

“நீ உடைந்து போகையில் எல்லாம்.. நான் கூட இருப்பேன்... நீண்ட நேரம் தூங்காமல் இருந்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே...” என்று அவன் குரல் அவள் காதுகளில் ரகசியமாய் கேட்டது.

அவள் நாசியில் அடித்த வெப்பம் மெல்ல மெல்ல தணிந்தது, அவள் இடையில் இருந்த அழுத்தம் குறைந்தது, அவளது கால்கள் காற்றுபட்டு குளிரை உணர்ந்தது.

கண்ணை திறக்க மனமில்லை, எதிரில் அவன் இல்லை என்பதை உணர்ந்தபோது.

அப்படியே கண்களை மூடியபடியே ஸோபாவில் விழுந்தாள்.

மூடியிருந்த கண்களினுள் இருந்து வழிந்த ஈரம், அவள் கன்னங்களில் பரவி காய்ந்தது.

அப்படியே அசதியில், அயர்ந்து உறங்கிப் போனாள் அவள்

பூமிபுத்திரன்

# அமெரிக்க இடைக்காலத் தேர்தல்



# வெளிப்படையாகத் தெரியும் பிளவு

உலகளாவிய அடிப்படையில் ஏற்பட்டு வரும் வலது சாரிகளின் எழுச்சி என்பது, அண்மைக் காலத்தில் பலராலும் அறியப்பட்ட சேதி. அதேபோன்று உலகின் அநேக நாடுகளில் வலதுசாரிகளுக்கும், இடதுசாரிகளுக்கும் இடையிலான இடைவெளி மிகவும் துலாம்பரமாக வெளியாகிக் கொண்டிருப்பதும் அறிந்ததே!. மறுபுறம் ஏழைகளுக்கும், செல்வந்தர்களுக்கும் இடையிலான இடைவெளி மென்மேலும் விசாலமாகிக் கொண்டிருக்கின்றது என்பதுவும் மறைக்கப்பட முடியாத உண்மையாக உள்ளது. கொரோனாக் கொள்ளை நோய் உலகின் பொருளாதாரத்தை முடக்கிப் போட்டிருந்த காலகட்டத்திலும் பெரும் செல்வந்தர்கள் மேலும் செல்வத்தைத் தேடிக் கொண்டார்கள் என்பதுவும், புதிதாகப் பல ஆயிரக் கணக்கான செல்வந்தர்கள் உருவாகினார்கள் என்பதுவும் தெரிந்த விடயம்.

இத்தகைய பின்னணியில் அமெரிக்காவில் தற்போது நடைபெற்று முடிந்திருக்கின்ற அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இடைக்காலத் தேர்தல் கவனத்தை ஈர்க்கிறது. உலக நாடுகளைப் பொறுத்த வரை உலகின் எந்தவொரு நாட்டிலும் இல்லாதவாறு அமெரிக்கச் செய்திகள், பன்னாட்டு ஊடகங்களில் அதிகம் இடம் பிடிப்பது ஒன்றும் தெரியாத சங்கதி அல்ல. உலகின் காவல்காரன் என்னைத் தன்னைக் கூறிக் கொள்ளும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலேயே அல்லது செல்வாக்கு வளையத்தின் உள்ளேயே பெரும்பாலான பன்னாட்டு ஊடகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற அடிப்படையில், அமெரிக்கச் செய்திகள் இவ்வாறு பன்னாட்டு ஊடகங்களில் அதிகம் இடம் பிடிப்பது வியப்பான விடயமல்ல.

சில நாடுகளில் இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஊடகங்கள், தமது சொந்த நாட்டின் செய்திகளுக்கு முக்கியத்துவம்

வழங்குவதை விடவும், அமெரிக்க நாட்டுச் செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதையும் அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில், அமெரிக்காவில் நடைபெற்ற இடைக்காலத் தேர்தல் தொடர்பான செய்திகளும் இவ்வாறு உலகளாவிய அடிப்படையில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.


அமெரிக்காவைப் பொறுத்தவரை 4 வருடங்களுக்கு ஒரு முறை, அரசுத் தலைவர் தேர்தல் நடைபெறுவது நாம் அறிந்த விடயம். அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரசுக்கான தேர்தலும்; மேலவை எனப்படும் செனட் சபை உறுப்பினர்களுக்கான தேர்தலும், அரசுத் தலைவர் தேர்தல் நடந்து முடிந்து, இரண்டு ஆண்டுகளின் பின்னர் நடைபெறும். இதுவே இடைக்காலத் தேர்தல் என அழைக்கப் படுகின்றது. குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி என இரண்டு கட்சிகளுமே மாறி மாறிப் பதவிக்கு வரும் அமெரிக்காவில், அரசுத் தலைவர் எந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றாரோ, அவர் சார்ந்த கட்சிக்கு எதிரான கட்சியே இடைக்காலத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெறுகின்ற போக்கு பெரும்பாலும் உள்ளது. நடப்புத் தேர்தலிலும் அவ்வாறே எதிர்பார்க்கப் பட்டது.

அமெரிக்கக் காங்கிரசில் 435 ஆசனங்களும், செனட் சபையில் 100 ஆசனங்களும் உள்ளன. நடப்புத் தேர்தலில் தற்போது வரை வெளியாகியுள்ள முடிவுகளின் அடிப்படையில் செனட் சபையில்; 50 ஆசனங்களை ஆளும் குடியரசுக் கட்சி கைப்பற்றி உள்ளது. துணை அரசுத் தலைவராக உள்ள கமலா ஹாரிஸ் அவர்களும், செனட் சபையில் வாக்களிக்கும் உரிமையைக் கொண்டுள்ள நிலையில், செனட் சபை தற்போது குடியரசுக் கட்சியின் வசமாகி உள்ளது. இன்னும் ஒரேயொரு ஆசனத்துக்கான முடிவே தெரிய வேண்டிய நிலை உள்ள போதிலும், அரிசோனாவில் டிசம்பர் 6ஆம் திகதி நடைபெறும் மறுவாக்குப் பதிவில் குடியரசுக் கட்சி வெற்றி பெற்றாலும், இதில் எந்த மாற்றமும் வரப் போவதில்லை என்பது நிச்சயம்.

காங்கிரசைப் பொறுத்தவரை அதில் உள்ள 435 இடங்களில் பெரும்பான்மைக்கு ஆகக் குறைந்தது 218 இடங்களையாவது ஒரு கட்சி பெற்றாக வேண்டும். இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை வெளியான முடிவுகளின் படி குடியரசுக் கட்சி 217 இடங்களையும்,


**Dortmund மாநகரில்....**

**தமிழர் அரங்கம் கல்விக் கூடம்**





**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்துபயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**



ஜனநாயகக் கட்சி 204 இடங்களையும் கைப்பற்றி உள்ளன. இன்னும் 14 இடங்களுக்கான முடிவுகள் வெளியாக உள்ள நிலையில் குடியரசுக் கட்சி காங்கிரசைக் கைப்பற்றுவது பெரும்பாலும் உறுதியாகி விட்டது. இவ்வாறு குடியரசுக் கட்சி காங்கிரசைக் கைப்பற்றும் பட்சத்தில் அடுத்துவரும் இரண்டு வருடங்கள் அரசுத் தலைவர் ஜோ பைடனைப் பொறுத்தவரை கடுமையான ஆட்சிக் காலமாகவே விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாளித்துவத்தின் தொட்டிலான அமெரிக்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரண்டு கட்சிகளும் வலதுசாரிக் கட்சிகளே!. எனினும், குடியரசுக் கட்சியை விடவும் ஜனநாயகக் கட்சி ஓரளவுக்குப் பரவாயில்லை எனச் சொல்லும் அளவுக்கு இறுக்கமற்ற வலதுசாரித் தனத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. அதேவேளை, போர் என வந்துவிட்டால் இரண்டு கட்சிகளுமே ஒன்றுக்கு ஒன்று சளைத்ததில்லை என்பது வரலாறு.

தற்போதைய இடைக்காலத் தேர்தலில் குடியரசுக் கட்சிக்கு மாபெரும் வெற்றிகள் எதிர்பார்க்கப்படுவதாகக் கருத்துக் கணிப்புகள் தெரிவித்திருந்த போதிலும், அவ்வாறு பெரிதாக எதுவும் நடந்து விடவில்லை என்பது ஒரு ஆறுதலான அம்சமாகவே பார்க்கப்படுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட வகையில் குடியரசுக் கட்சிக்குச் சாதகமான ஒரு அலை அடித்திருந்தால், முன்னாள் அரசுத் தலைவரான டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தைக் கோருவார் என எதிர்பார்ப்புகள் நிலவின. எவ்வாறாயினும் அடுத்துவரும் நாட்களில் முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிடப் போவதாக ட்ரம்ப் ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில், அதனை அறிந்து கொள்வதற்கான ஆர்வம் மக்கள் மத்தியில் இல்லாமலும் இல்லை. எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே ட்ரம்ப் தேர்தலில் போட்டியிட விரும்பினாலும், அவரது கடும்போக்கு நிலைப்பாடு காரணமாகவும், அவரது ஆதரவு பெற்ற பல போட்டியாளர்கள் இடைக்காலத் தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ள நிலையிலும், அவருக்கு கடசிக்குள் ஆதரவு கிடைக்குமா? என்பது பொறுத்திருந்தே பார்க்கப்பட வேண்டும்.

மறுபுறம், காங்கிரசில் பெரும்பான்மையை இழக்கும் நிலையில் உள்ள ஜோ பைடன் நிர்வாகத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கேள்விகள் எழுந்துள்ளன. குறிப்பாக, உக்ரைன் போர் தொடர்பில் அமெரிக்கா வழங்கிவரும் அளவுக்கு அதிகமான பொருண்மிய மற்றும் படைத்துறை உதவிகளைத் தொடர்வது சாத்தியமாகுமா? என்ற சந்தேகம் உள்ளது. இது தொடர்பில், தேர்தலுக்கு முன்னமேயே குடியரசுக் கட்சி மத்தியில் இருந்து எதிர்ப்புகள் பதிவாகியிருந்தமை அவதானிக்கத்தக்கது.

இரண்டு கட்சிகளுமே வலதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட கட்சிகளாக இருந்த போதிலும், அணுகுமுறை விடயத்தில் இரண்டு கட்சிகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன. அந்த வேறுபாடுகள் நடப்புத் தேர்தலில் துல்லியமாகத் தெரிகின்றன. அது அமெரிக்கச் சமூகத்தில் உள்ள பிளவைப் புலப்படுத்துவதாக உள்ளது. ஒன்றுக்கொன்று எதிரெதிரான கருத்துகளைக் கொண்ட அல்லது அணுகுமுறைகளைக் கொண்ட கட்சிகள் சார்ந்து பிளவுபட்ட மனோநிலையுடன் வாக்களிப்பில் மக்கள் கலந்து கொள்ளும் போக்கு உலகளாவி அடிப்படையில் அதிகரித்து வருகின்றது. இத்தகைய போக்கு தேர்தல் ஜனநாயகத்தின் தவிர்க்க முடியாத அம்சமாக விளங்கினாலும் மக்கள் மத்தியில் நிலவும் பிளவுபட்ட மனோநிலை ஆரோக்கியமானதல்ல என்பதை மறுத்துவிட முடியாது.

# Sri Lankan Airlines

# ab 799



colombo 40kg

**Nishanthan**

**0176 2168 2149**

★★★★★
5 STAR SERVICE



CENTURY
TRAVELS









**Rheinische Str.29-44137-Dortmund**

**0231 58 96 557 | 0231 55 74 319**

www.centurytravels.de | info@centurytravels.de


BOX
ONE MONTH FREE
TALK TIME TO 132
COUNTRIES, INCLUDING
INDIA AND SRILANKA,
FOR EVER
V BOX PURCHSED
IN GERMANY.
SUPER
SALE
IN GERMANY
119 €
CALL
ONLY
+49 1514 6978484
BIGG BOSS
6